விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 335 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 03 புதன்கிழமை (19.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

- நாட்டில் இனவாதத்துக்கு இடமில்லை -

# திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் அறிக்கை கோரியுள்ளேன்



## பாராளுமன்றில் ஜனாதிபதி அநுர குமார

(கொழும்பு)

நாட்டில் இனவாதம் ஏற்பட இடமளிக்கமாட்டோம், திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் முழுமையான அறிக்கை கோரியுள்ளேன் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் 160.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவு

- 33 குடும்பங்கள் பாதிப்பு
- 5 வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 நாட்களாக பெய்த மழையால் 160.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ள

15ஆம் பக்கம் பார்க்க

கடன் சுமை காரணமாக

## யாழில் விபரீத முடிவெடுத்த இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அளவுக்கு அதிகமான கடன் சுமை காரணமாக யாழில் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அளவெட்டி வடக்கு

15ஆம் பக்கம் பார்க்க

திருகோணமலை விவகாரத்தில்

# அரசியல் இலாபம் தேட எவருக்கும் இடமளியோம்

## அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தை வைத்துக் கொண்டு எந்தவொரு தரப்பினருக்கும் அரசியல் இலாபம் ஈட்டுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியளித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## 76 வருட காலமாக இந்நாட்டில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

76 வருட காலமாக இந்நாட்டில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வரு

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக் கட்சி - அநுர குமார கொழும்பில் நாளை சந்திப்பு

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் பேசுபொருளாகும்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பு நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் ரயில் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் வீதி புகையிரதக் கடவைக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அரியாலையைச் சேர்ந்த விஜயரட்ணம்மோகனராஜ் (வயது-54) என்ற இரண்டு பிள்ளைகளின்

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை விடுவிக்கக்கூடாது



### பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை ஒருபோதும் விடுவிக்கக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுச்


15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
08
-
02
-
1961



உதிர்வு
17
-
11
-
2025

## அமரர் சுந்தரலிங்கம் சுந்தரகுமார்

### (ஓய்வுநிலை வடமாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர்)

வானம் இன்று கண்ணீர் சிந்துகிறது
வன்னி நிலத்தின் காற்றில் துயரம் நெளிகிறது;
நாங்கள் நம்பிக்கைக்காக அலைந்த நாட்களில்
ஒளியாக நின்றது உம் வாழ்வே ஐயா...

போர் நிறைந்த இருள் சூழ்ந்த காலங்களில்
கட்டுமானம் என்பது கனவாய் தோன்றியபோது,
நிர்க்கதியில் நின்ற எம்மை அணைத்து எழுப்பி,
"மறு கட்டமைப்பு என்பது மக்களின் உள்ளத்தில் தொடங்கும்"
என்று சொல்லித் தந்த
அன்பின் அடித்தள நிபுணர் நீங்கள்...

வன்னியின் உடைந்த கற்களிலும்
எதிர்காலம் குலுங்கிய தருணங்களிலும்
கடமைக்கான உம் ஒளி மட்டும்
அமைதியாய் திகழ்ந்தது.

தமிழ்த் தேசத்தின் கட்டுமானத்தில்
உங்கள் பங்களிப்பு சுவர் கட்டுமானமல்ல
ஒரு தேசத்தின் உடைந்த நம்பிக்கையை
மீண்டும் எழுப்பிய பொன்னான கைரேகை.

எங்கள் குடிபெயர்ந்த குழப்பத்தில்
எம்மை மீண்டும் குடியமர்த்தி,
தொழில் பாதையில் முன்னேற்றி
தலைமுறை ஒன்றின் எதிர்காலத்தை
நீங்கள் மறுபடியும் வடிவமைத்தீர்கள்...

உங்களுடன் பேசும் ஒவ்வொரு நிமிடமும்
எங்கள் வாழ்வின் தாளில் பொறிக்கப்பட்ட
பாடமாகவே உள்ளது.
கட்டுமானத் துறையின் கடினமான சவால்கள்
உங்களின் அறிவால், உங்களின் உறுதியால்
எளிதான பாதையாக மாறின.

நிறுவனத்தின் மிகக் கடினமான காலங்களில்
எங்கள் அணியின் முன்னணி ஒளி
நீங்களே...
அந்த வழிகாட்டுதலின் சுவடுகள்
இன்றும் எங்களை வழிநடத்துகின்றன.

இன்று....
நாங்கள் சொல்ல முடிவது ஒன்றே,

"அமைதியாக உறங்குங்கள் ஐயா...."

உங்கள் செயல்கள் முடிந்திருக்கலாம்,
ஆனால் உங்கள் தடங்கள்
நாங்கள் கட்டும் ஒவ்வொரு சுவரிலும்,
ஒவ்வொரு கனவிலும்,
ஒவ்வொரு தலைமுறையிலும்
என்றைக்கும் நிற்கும்.
பலரது வாழ்வில்
மறக்க முடியாத பெருந்தகையாக
நீங்கள் என்றும் நிலைத்திருக்கிறீர்கள்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.**

பணிப்பாளர், பொறியியல்சார் உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்,
K.P.K கட்டுமான நிறுவனம், கிளிநொச்சி.

(C-4358)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் நம்பிக்கை வீண்போனதா?

## திருமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து கொந்தளித்த இயக்குநர் கௌதமன்



(சென்னை) கடந்த காலங்களில் இனவாத ரீதியாக செயற்பட்ட ஆட்சியாளர்களான ராஜபக்ச, ரணில் ஆகியோரின் பாதையிலா அநுரகுமார திசாநாயக்க பயணிக்கிறார் என தென்னிந்திய பிரபல இயக்குனரும் தமிழ்ப் பேரரசு கட்சியின் நிறுவனருமாகிய வ.கௌதமன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்று வெளியிட்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "நீங்கள் இனவாதம் அற்ற ஒருவர் என நம்பி உங்களுடைய தேசிய மக்கள் சக்திக்கு எங்கள் தமிழர்கள் பெருவாரியான வாக்குகளை அளித்திருந்ததை கடந்த பொதுத் தேர்தலில் நாங்கள் கண்கூடாக பார்த்திருந்தோம்.

இருப்பினும் திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவத்தை பார்க்கின்ற போது கடந்த கால ஆட்சியாளர்களின் வழியிலா அநுரகுமார திசாநாயக்கவும் என்ற கசப்பான கேள்வி எழுகின்றது.

தமிழர்களின் தலைநகரான திருகோணமலை மண்ணில் சட்டவிரோதமாக வைக்க முயற்சித்த புத்தர் சிலையை அகற்றுமாறு கோரி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டபோது அங்கு பதற்றம் ஏற்பட்ட நிலையில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அந்த புத்தர் சிலையை அங்கிருந்து எடுத்து செல்லுமாறு கூறியபோது நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம்.

இருப்பினும், அந்த மகிழ்ச்சி சில மணிநேரமே நீடித்தது என்பது வேடிக்கையாகவும், வேதனையாகவும் உள்ளது.

சட்டவிரோத புத்தர் சிலையை அகற்ற சொல்லிய உங்களது அரசாங்கமே மீளவும் அங்கே அந்த சிலையை வைக்குமாறு கூறியது.

அப்படியானால் உங்களது கட்சி மீது எங்கள் மக்கள் வைத்த நம்பிக்கை வீண்போனதா? மக்களின் நாயகன் என உங்களை போற்றிய எம் மக்களின் கனவு மண்ணோடு மண்ணானதா? ஈழ தேசத்தில் பூர்வீகமாக வாழும் தமிழ் மக்களின் நெஞ்சங்கள் தொடர்ந்தும் வெந்தழலில்தான் வேக வேண்டுமா ?

அடித்தவன் தொடர்ந்து அடிக்கும் போது ஏற்படுகின்ற வலியை விட அணைப்பது போல் அணைத்துவிட்டு அதே கரங்களால் அடிக்கின்ற வலி என்பது சொல்லில் அடங்காத ஒரு பெருவலி, இலங்கையின் ஜனாதிபதியாக இருக்கின்ற தாங்கள் இதனை உணரவில்லையா?

எமது தொப்புள் கொடி உறவுகளின் உணர்வுகளை புரிந்த ஒரு ஜனாதிபதி ஆட்சிக்கு வந்துள்ளார் என தமிழகத்தில் இருந்து நாங்கள் சற்று ஆறுதலடைந்ததுடன் கொஞ்சம் நிம்மதியாகவும் மூச்சு விட்டோம்.

ஒரு இரவு தூங்கி காலையில் எழும்போது அந்த நிம்மதி மண்ணோடு மண்ணாகும் வகையிலான இச்செய்தி எங்கள் செவிகளுக்கு கிடைத்த போது அந்த சோகக் கதையை இனி நாங்கள் யாரிடம் சொல்லியழ? உங்கள் மீது நாங்கள் வைத்த நம்பிக்கையை நோவதா?

அல்லது உங்களை நம்பி வாக்களித்த எம் மக்களை நோவதா? இதனை நாங்கள் எப்படி பார்க்க வேண்டும் என தயவுசெய்து நீங்களே கூறுங்கள்.

இனியும் எதுவும் கெட்டுப் போகவில்லை, அந்த புத்தர் சிலை விவகாரத்துக்கு தமிழ் மக்களின் விருப்பப்படியான தீர்வை கொடுங்கள், அந்த சிலையை அகற்றுமாறு உத்தரவிட்டு உங்களின் அரசியல் அறத்தை காப்பாற்றுங்கள், அதன் மூலமாவது புண்பட்ட எங்கள் நெஞ்சு ஓரளவேனும் ஆறுதலடையும்" என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## இளைஞர்கள், குழந்தைகள் மீது அதிக காய்ச்சல் பாதிப்பு அபாயம்

### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

இவ்வருடத்தில் வழமையை விட அதிக அளவிலான குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்படலாம் என ஹெர்ட்ஃபோர்ட்ஷயர் மாவட்ட சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும் எதிர்வரும் சில வாரங்களில் இது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோய்க்கான அறிகுறிகள் உள்ளவர்கள் உடனடியாக முகக்கவசம் அணிவதுடன் மற்றவர்களுடனான நேரடி தொடர்பினை தவிர்க்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். (நி)

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள் 11 மாதங்களில் 2,183 முறைப்பாடுகள்



(கொழும்பு)

கடந்த 11 மாதங்களில் நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 2,183 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சில் நிறுவப்பட்டுள்ள 1938 என்ற கட்டணம் இல்லா துரித அழைப்பு இலக்கத்திற்கே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக துறைசார் அமைச்சு அறிவித்துள்ளது.

அவற்றில் அதிகப்படியாக வீட்டு வன்முறைகள் தொடர்பில் 1,488 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அத்துடன் இணையக் குற்றங்கள் தொடர்பில் 234 முறைப்பாடுகளும், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 7 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. (நி)

## திருகோணமலை சம்பவத்தை இன, மதவாதமாக மாற்ற வேண்டாம்!



(கொழும்பு)

திருகோணமலை சம்பவத்தை யாரும் இனவாத, மதவாதமாக மாற்றவேண்டாம். தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும். அதனால் நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை என் பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நிறைவேற்றுத் துறை, நீதிமன்றம், பாராளுமன்றம் ஆகிய மூன்று தூண்களும் சமநிலையாக செயற்பட வேண்டும் என நாங்கள் படித்திருக்கிறோம். ஆனால் அது செயற்பாட்டில் வரும் காலம் வரும்வரை நாங்கள் பார்த்திருந்தோம்.

ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியின் கீழே இந்த மூன்று துறைகளும் சமநிலையாக செயற்பட இடமளிக்கப்பட்டிருக்கிறது.

ஏனெனில் ஜேஆர், உயர் நீதிமன்ற நீதியர்களுக்கு கல் எறிந்தார். அவ்வாறு எந்த சம்பவமாவது இந்த அரசாங்கத்தில் இடம்பெற்றிருக்கிறதா?

அதேபோன்று நாட்டில் நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுவதில்லை என நாமல் ராஜபக்ஷ தெரிவிக்கிறார். ஆனால் மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பசில்ராஜபக்ஷவின் வழக்கை கையாண்டுவந்த சட்டத்தரணியை உயர்நீதிமன்றத்துக்கு நியமித்தார்.

அதன்பின்னர் திவிநெகும வழக்கில் பசில் ராஜபக்ஷவுக்கு சார்ப்பாக தீர்ப்பெழுதவில்லை என்பதறக்காக பிரதமர நீதியரசர் சிராணி பண்டார நாயக்கவை விரட்டினார்கள்.

அதன் பின்னர் செலான் வங்கியின் தலைவரை உயர் நீதிமன்ற ஆசனத்தில் அமர்த்தினார்கள். இவர்கள்தான் இன்று நீதிமன்ற சுயாதீனம் தொடர்பில் கதைக்கின்றனர்.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சி நீதிமன்றத்தை எவ்வாறு வழிநடத்தினார்கள், நீதிமன்ற சுயாதீனத் தன்மையை எவ்வாறு பாதுகாத்தார்கள் என்பது வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்போது தான் நீதிமன்ற நடவடிக்கைகள் சுயாதீனமாக செயற்படுகின்றன. நீதிபதிகளின் இடமாற்றம் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவே நடவடிக்கை எடுக்கிறது. அதில் யாருக்கும் அழுத்தங்கள் கொடுக்க முடியாது.

திருகோணமலை சம்பவத்தை ஒருசிலர் இனவாதமாக்க முயற்சிக்கின்றனர். அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதேநேரம் நீதிமன்றத்துக்கும் அறிவித்திருக்கிறது. தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும்.

அதனால் அந்த நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை, எனவே இந்த சம்பவத்தை இனவாத, மதவாதமாக மாற்ற வேண்டாம் என தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர்,
வங்கியாளர், ஆசிரியர்கள், அரச
உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர்,
வெளிநாட்டு மணமக்கள் எனப் பல்லாயிரக்
கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.

மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபம் தாண்டி 3 வீடு தள்ளிய லேனில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306

(C-4362)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


## கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி
## 2026 ஆம் ஆண்டுக்கான வரைவு வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு

கரைச்சி பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரைவு வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக 2025.11.20 ஆம் திகதி தொடக்கம் 2025.12.03 ஆம் திகதி வரை கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம், உப அலுவலகம் கிளிநொச்சி, உப அலுவலகம் முரசுமோட்டை மற்றும் சபையின் நூலகங்களான கிளிநொச்சி, வட்டக்கச்சி, முரசுமோட்டை, ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானங்கள், செலவினங்கள் தொடர்பான விபரங்களும், மேற்கொள்ளப் படவிருக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள் ளதால் பொது மக்கள் பார்வையிட்டு அபிப்பிராயங்கள் இருப்பின் தவிசாளர்/ செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ 2025.12.05 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க முடியும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-4363)

## மரண அறிவித்தல்



## நடேசலிங்கம் ஜெயராணி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசலிங்கம் ஜெயராணி அவர்கள் நேற்று 18.11.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சோமசுந்தரம் - பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் நடேசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் கௌதமி(வவி), கஜேந்திரன்(கண்ணன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவரூபன், சாமினி ஆகியோரின் மாமியாரும் விதுரா, டிலக்ஷிகா, மயூரிகா, டனுஸ்தரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பராசக்தி, காலஞ்சென்ற ஜெயராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற சபாரத்தினம், இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.11.2025 புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 288 9743
077 711 0853

தகவல்:
குடும்பத்தினர்

(C-4364)

## மரண அறிவித்தல்



மலர்வு
17.10.1948

உதிர்வு
18.11.2025

## கலாபூஷணம் க.ப. பரராஜசிங்கம் (பப்பா)

### (இசை நாடகக் கலைஞர், பௌராணிகர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

இந்திரம்மன் கோவிலடி துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சின்னத்தாய் - மூச்சம்பலம் புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் க.ப. பரராஜசிங்கம் (ஓய்வுநிலை விற்பனைப் பிரதிநிதி - நெஸ்லே லங்கா லிமிட்டட், முகாமையாளர் - லாலா சோப்) அவர்கள் நேற்று 18.11.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கலைஞானகேசரி பரஞ்சோதி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அழகரத்தினம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவராஜசிங்கம், தனபாலசிங்கம், கமலகுமாரி, தெய்வேந்திரராஜா, காலஞ்சென்ற வசந்தகுமாரி ஆகியோரின் சகோதரரும் பாக்கியம், ஸ்ரீமதிதேவி, மனோகரன், சுமதி, கதிரவேற்பிள்ளை, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, தனலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ரதீஸ்(ஆசிரியர் - யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), றமேஸ்(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - யாழ். மாவட்டச் செயலகம்), றாதிகா(ஆசிரியர் - யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மீரா(ஆசிரியர் - யா/ மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை), நிரூஜா(நிறைவேற்று உத்தியோகத்தர் இலங்கை வங்கி - மானிப்பாய்), கிருபாகரன்(ஆசிரியர் - யா/எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை, யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இலக்கியா, அட்ஷயா, அபிநயா, அதிசயா, கவிநயா ஆகியோரின் பாசமிகு பேரனும் கார்த்திகா, கீர்த்திகா, தர்சன், தனுசா, தரணியா, ரினா, திமித்தி, அபிகேல், ஷஜிந்தா ஆகியோரின் பெரிய தந்தையும் கோசலை, குந்தவி, வானதி, அருண்குமார், அருண்றாம், அருண்பிரசாந் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 20.11.2025 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று காலை 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலைக்கோயில்,
சின்னத்தாய்,
புலோலி தெற்கு.

தகவல்:
பிள்ளைகள்
0777 448 702

(C-4365)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில்
# நடமாடும் சேவைகள்

(யாழ்ப்பாணம்)

கிளின் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் நடத்தும் நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பெற்றுக் கொள்ளக்கூடிய சேவைகளாக பதிவாளர் பிரிவின் சேவைகள், காணி தொடர்பான சேவைகள், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், பிரதேச சபைகளால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக்களங்களால் வழங்கப்படும் சேவைகள், சமூக சேவைகள் திணைக்களங்களால் வழ்ங்கப்படும் சேவைகள், மோட்டார் வாகன பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள், ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், தென்னைப் பயிர்ச் செய்கை சபை, கமநல சேவைகள் திணைக்களம் தொடர்பான சேவைகள், மின்சார சபை தொடர்பான சேவைகள், நீர் வழங்கல் அதிகார சபை தொடர்பான சேவைகள், திறன் அபிவிருத்திப்பிரிவு தொடர்பான சேவைகள், மனித வள முகாமைத்துவப்பிரிவு தொடர்பான சேவைகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரிவு தொடர்பான சேவைகள், கிராம அபிவிருத்தி பிரிவு தொடர்பான சேவைகள், கலாசாரப் பிரிவு தொடர்பான சேவைகள், கைத்தொழில் திணைக்களம் தொடர்பான சேவைகள், சமுர்த்தி திணைக்களம் ஆகிய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். (3)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 07, மூளாய் 1 ஆம் வீதி, வட்டாரம் - 10

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 10, மூளாய் 1ஆம் வீதியிலுள்ள இல: 07 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **ஞானவைரவர் கோவில்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **சந்தனக்குருக்கள் நடராஜசர்மா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5578/01.02.2004ஆம் இலக்க உறுதியால் **திருநாவுக்கரசு நாகராசா** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நடராஜசர்மா பிரசாந்தன்** ஆகியவர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9254/04.02.2008 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சந்தனக்குருக்கள் நடராஜசர்மா** ஆகியவரிமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"பருத்தியொல்லை"**
இறை: **வட்டுக்கோட்டை மேற்கு**
வீஸ்தீரணம் : **நில.பர 3 3/4**
எல்லைகள்:**கிழக்கு, தெற்கு** - பருத்தியொல்லை வயிரவ கோயில் ஆதனம், **வடக்கு** - காலிங்கராயர் செல்லப்பாவின் உரித்தாளரின் ஆதனம், **மேற்கு** - ஒழுங்கை

குறித்த **நடராஜசர்மா பிரசாந்தன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நடராஜசர்மா பிரசாந்தன்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(5947)

## கேள்வி அறிவித்தல் - 2026 கிளிநொச்சி

சோபியா சிறுவர் அபிவிருத்திதிட்டம்,
சாலோம் நகர்,
புதுமுறிப்பு,
கிளிநொச்சி.

புதுமுறிப்பு,கோணாவில்,ஊற்றுப்புலம்,ஜெயந்திநகர்,செல்வாநகர்,உருத்திரபுரம் பகுதிகளில் அமைந்துள்ள பயனாளிகளுக்கு 60 மலசலகூடங்கள் அமைப்பதற்கான கேள்விகள் கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி- 26-11-2025
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி- 26-11-2025 - 14-12-2025

கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு எம்மால்வழங்கப்பட்ட கடிதஉறையில் **சோபியா சிறுவர்அபிவிருத்திதிட்டம்,சாலோம் நகர், புதுமுறிப்பு, கிளிநொச்சி** என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் பக்க மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு **மாலை 5.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும்.அல்லது அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்வி பெட்டியினுள் மேற்குறித்த நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

கேள்விகள் யாவும் **15/12/2025** ஆம் திகதி **காலை 10** மணிக்கு நிர்வாகசபை அல்லது கேள்விச்சபை முன்னிலையில் திறக்கப்படும். நிர்வாகசபை அல்லது கேள்விச்சபை முடிவே இறுதிமுடிவாகும்.கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

**நியந்தனைகள்**

- உரிய காலத்தில் சமர்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலும் இன்றி இரத்துச்செய்யப்படும்.
- குறைந்தது C8 பதிவுஉள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- சமர்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ,மீள் கேள்வி கோரவோ நிர்வாக சபைக்கு அதிகாரம் உண்டு. ஒப்பந்த காலம்- தை- சித்திரை 2026.
- Tenders Quotation's not Submitted on time(26-11-2025- 14-12-2025)will be cancelled without any notice.
- Those with at least a valid C8 Certificate Can Apply.
- The Board of Directors has the authority to reject or reconsider any Tenders Submitted in whole or in part. Contract Period- January – April 2026.

**Sophia Child development centre,**
**Shalomnagar,Puthumuripu, Kilinochchi.**

(C-4353)

# இராசிபலன்

19.11.2025
கார்த்திகை 03, புதன்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 10.08 மணிவரை

சுவாதி முற்பகல் 9.03 மணிவரை
சுப நேரம் 4.39-6.09 மணிவரை
இராகுகாலம் 12.09-1.39 மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்: ரேவதி

**வளவன்**



சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.



மனதில் நீண்ட காலமாக இருந்த பாரம் குறையும், வாகன சுகமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.



பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பயணங்களால் பலனுண்டு, உடல் நலன் சீராகும், போசன சுகமுண்டு.



மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.



நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும்.



பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள்.



சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



வீண்பழிகள் அகலும், சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



வருமானம் பெருக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தாழ்ந்த சுபாவமுண்டு.



வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.



கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.



வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**உன்னைத்தவிர வேறு யாரும் உனக்கு அமைதி தர முடியாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பூர்வீகக் காணிகளை மீளவும் பெற்றுத் தாருங்கள்

## கள்ளிக்குளம் மக்கள் கோரிக்கை

**(வவுனியா)**

**வவுனியா, கள்ளிக்குளம் சிதம்பரம் பகுதியில் மக்களின் நெற்காணிகளை வனவளத் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளதுடன், நெற்பயிரை சேதப்படுத்தி தேக்கு மரம் நாட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

இது தொடர்பாக அம்மக்கள் கருத்து தெரிவித்த போது, நாங்கள் பூர்வீகமாக குறித்த காணிகளில் பயிர்செய்து வந்த நிலையில் கடந்த 1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரினால் இடம்பெயர்ந்திருந்தோம். மீண்டும் 2012 ஆம் ஆண்டு மீள் குடியமர்த்தப்பட்டதுடன் எமது காணிகளில் நெற்பயிர்செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

தற்போது 13 ஆண்டுகளின் பின் வனவள பிரிவு உத்தியோகத்தர்கள் எமது காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், அங்கு விதைக்கப்பட்டுள்ள பயிர்களை அழித்து தேக்கு மரம் நாட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களது உழவு இயந்திரங்களை விவசாய பயிர்களுக்கு மேலாக ஓட்டிச் சென்று பயிர்களை சேதப்படுத்தி வருகின்றனர்.

இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த காணிக்கான ஆவணங்களை வழங்க அரசாங்கத்தால் பதிவு செய்ததற்கான ஆவணமும் எங்களிடம் இருக்கிறது.

எனவே வனவளத் திணைக்களத்தின் நடவடிக்கையை தடுத்து நிறுத்தி எமது பூர்வீக காணிகளை மீளவும் பெற்றுத் தருமாறு நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர அவர்களுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் மகஜர் ஒன்றினையும் கையளித்திருந்தனர். (8-250)

# மன்னார் நகரசபை பாதீடு 4 மேலதிக வாக்குகள்

(மன்னார்)

மன்னார் நகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு மேலதிக 4 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆதரவாக 9 வாக்குகளும், எதிராக 5 வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு 2 உறுப்பினர்கள் சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை.

மன்னார் நகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் சபை முதல்வர் டானியல் வசந்தன் தலைமையில் கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாதீடு வாசிக்கப்பட்ட நிலையில் சில உறுப்பினர்களால் பாதீட்டிற்கு எதிராக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில் பகிரங்க வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது மேலதிகமாக 4 வாக்குகளினால் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டது.

வாக்களிப்பு நிறைவில் எதிராக வாக்களித்தவர்களில் தமிழ் மக்கள் கூட்டணியின் இரு உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர். (8-285)

# யாழில் கோடாவுடன் சந்தேக நபர் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் - ஏழாலை வடக்கு பகுதியில் 180 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கசிப்பு தயாரிப்பதற்காக வைத்திருந்த கோடாவே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

# வெள்ளத்தில் மூழ்கியது சுன்னாகம் பொலிஸ் நிலையம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக சுன்னாகம் பொலிஸ் நிலையம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

சுன்னாகத்தில் தனியார் காணிகளில் இயங்கி வந்த பொலிஸ் நிலையம் கடந்த வருடம் நவம்பர் மாதம் தொடக்கம் புதிய இடத்தில் இயங்கி வருகிறது.

இந்நிலையில் யாழில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக புதிய பொலிஸ் நிலைய வளாகம் வெள்ளத்தால் நிறைந்து காணப்படுகிறது.

வெள்ள நீர் வழிந்து வரும் நிலையில் , மழை தொடர்ந்து பெய்யுமாயின் பொலிஸ் நிலையத்தினுள் வெள்ளம் புகும் அபாயம் உள்ளதால், அதனை தடுக்க பொலிஸார் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். (8-33)

# அரிசி ஏற்றி வந்த லொறி விபத்து

(நெளுக்குளம்)



அரிசி ஏற்றி வந்த லொறி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு வற்றாப்பளை பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி அரிசி ஏற்றி பயணித்துக் கொண்டிருந்த லொறி ஒன்று ஐயங்கன்குளம் பகுதியில் உள்ள வளைவில் திரும்ப முற்பட்டபோது கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது.

குறித்த வாகனத்தில் பயணித்தவர்களுக்கு எதுவித ஆபத்துகளும் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 200 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 180 | 240 | 180 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 250 | 250 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 120 | 200 |
| கோவா | 200 | 180 | 200 | 250 | 200 |
| கரட் | 250 | 250 | 300 | 250 | 200 |
| பூசணி | 80 | 80 | 50 | 80 | 80 |
| புடோல் | 150 | 300 | 120 | 250 | -- |
| வாழைக்காய் | 150 | 70 | 50 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 200 | 350 | 220 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 150 | 200 | 180 |
| பாகற்காய் | 800 | 700 | 400 | 1000 | 600 |
| வெண்டக்காய் | 150 | 200 | 120 | 250 | 150 |
| கருணைக் கிழங்கு | 300 | 300 | 200 | 250 | |
| பயற்றங்காய் | 400 | 250 | 350 | 250 | 350 |
| லீக்ஸ் | 250 | 200 | 250 | 240 | 160 |
| பீற்றூட் | 300 | 180 | 120 | 250 | 150 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 600 | 650 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 400 | 800 | 600 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 400 | 350 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 120 | 160 | -- |
| கீரை – 1 பிடி | 120 | 60-120 | 80 | 150 | -- |
| தேசிக்காய் | 1000 | 1600 | 600 | 600 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 210 | 160 | 150-200 | -- |
| இராசவள்ளி | 650 | 700 | 500 | 800 | -- |
| வெங்காயப்பூ | -- | 450 | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | 180 | 150 | 250 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 60 | -- |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 | -- |
| [illegible] | -- | 100-150 | 120 | 250 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 ஈச்சமோட்டை கடற்கரை வீதி 32B எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 2007.04.25 ஆம் திகதி 1569 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் "புளியடியிற்புலமும் புங்கடியிற் கலட்டி தலைமடையும் மறுபிரிவுகளும் எனவும் மறுபெயர் வழங்கும் புதுத்தோட்டம்" எனும் பெயர்கொண்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 03.54 அளவு கொண்ட ஆதனத்தை யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை எனும் இடத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கந்தையா தெய்வேந்திரன் என்பவர் குறித்த ஆதனம் தனது பிதாவழி முதுசமாக வந்தடைந்தது என்றும் குறித்த ஆதனத்தை எனது பேரனும் பின்னர் நானுமாக கடந்த 47 வருடங்களிற்கு மேலாக பேணிப் பராமரித்து ஆட்சி செய்து வருகிறோம் எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் குறித்த வெளிப்படுத்தலில் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனம் எனது காலஞ்சென்ற தகப்பனாரின் முதுசமாகும். கந்தையா என்பவர் 35 வருடங்களாக ஆட்சிசெய்து வந்தார். அவருடன் சேர்ந்து நானும் 12 வருடங்கள் ஆட்சி செய்தேன் என்றும் இவை இரண்டு ஆட்சியும் சேர்ந்து 47 வருடங்கள் ஆட்சிசெய்துள்ளோம் என்றும் அவ்வாதனத்தில் கிணறும் வீட்டிற்கான கட்டிட அத்திவாரமும் கட்டியுள்ளேன் என்றும் இவ்வாதனத்தில் வைத்து வரும் வருமானங்களில் ஆதனத்தின் வேலிகளை அடைத்து வருகின்றோம் என்றும் இக்காணியில் நான் செய்துகொண்டுவந்த ஆட்சி மூலமும் எனக்கு பூரண சொந்தமாய் இருக்கின்றது எனவும் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் 1992ஆம் ஆண்டு தொடக்கம் 12 வருடங்களாக தங்குதடையற்ற சுயாதீனமான ஆட்சி செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் சங்கரப்பிள்ளை கந்தையா தெய்வேந்திரமும் பெண் ராகினியும் பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 25.04.2007 ஆம் திகதி 1570 இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் ஈச்சமோட்டை யாழ்ப்பர்ணத்தைச் சேர்ந்த சூசையப்பு றெமிங்ரனும் பெண் ஸ்பெளதினாவும் என்பவர்களுக்கு அதே அளவுகொண்ட ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

சூசையப்பு றெமிங்ரனும் ஸ்பெளதினாவும் என்பவர்கள் பிரசித்த நொத்தாரிசு எஸ் பி.அமரசிங்கி முகதாவில் 2013.06.04 ஆம் திகதி 9233 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜரின் சுரேனிகா றெமிங்ரன் என்பவருக்கு 11.31 பேச்சஸ் அளவு கொண்ட ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

மேலும் ஜரின் சுரேனிகா றெமின்ரன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2017.02.07 ஆம் திகதி 6828 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நிபந்தனை அறுதி மூலம் அலெக்சான்டர் ஆன் மேரி கிறிஸ்ரி என்பவருக்கு நிலப்பரப்பு 1. குளி 02.02 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நிபந்தனை அறுதியாக நிறைவேற்றியுள்ளார்.

அதன் பின்னர் அலெக்சாண்டர் ஆன் மேரி கிறிஸ்ரி தற்போது ஞானப்பிரகாசம் சுலக்சனும் பெண் ஆன் மேரி கிறிஸ்ரியும் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2021.02.18ஆம் திகதி 13065 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜரின் சுரேனிகா றெமின்ரன் என்பவருக்கு அதே விஸ்தீரணம் அளவு கொண்ட ஆதனத்தை அறுதியளித்துள்ளார்.

அடுத்து அரவிந்தன் லவன் பெண் ஜரின் சுரேனிகா (றெமின்ரன் மகள் ஜரின் சுரேனிகா) என்பவர் பிரசித்த நொத்தாரிசு எஸ். செலஸ்ரின் முகதாவில் 2021.03.15ஆம் திகதி 906 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் யோன் கரன்ஸ் கிறிஸ்ரின் வின்சன் டிபோல் பெண் தர்சிகா என்பவர்களிற்கு நிலப்பரப்பு 00.குளி 10.50 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நன்கொடையளித்துள்ளார்.

மேலும் அரவிந்தன் லவன் பெண் ஜரின் சுரேனிகா(றெமின்ரன்மகள் ஜரின் சுரேனிகா) என்பவர் பிரசித்த நொத்தாரிசு எஸ்.செலஸ்ரின் முகதாவில் 2023.08.08 ஆம் திகதி 1239 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய திருத்தல் உறுதி மூலம் யோன் கரன்ஸ் கிறிஸ்ரின் வின்சன் டிபோல் பெண் தர்சிகா என்பவர்களிற்கு குளி 10.5 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்திற்கு திருத்தல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி, கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "புதுத்தோட்டம்" என்ற "புளியடியிற் தோட்டம் புங்கடியிற்கலட்டி தலைமடையும் மறுபிரிவுகளும்" விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 02.02 ஆகும் ஆனால் தற்போது இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ் சுப்பிரமணியம் அவர்களால் 12.03.2021 ஆம் திகதி 0127 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின் படி விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 3 ஆகும். இதில் தெற்குப்பக்கமாக துண்டு 2 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 00. குளி 10.50 விஸ்தீரணமுடைய பகுதியாகும் இந்த நிலப்பரப்பு 00 குளி 10.50 இற்கும் எல்லைகள்

கிழக்கு - கடற்கரை வீதி
வடக்கு - மேற்குறித்த படத்தில் துண்டு 1 என காட்டப்பட்ட பகுதி
மேற்கு - மடுத்ததீன் சின்னப்பிற்குரிய ஆதனம்
தெற்கு - ஒழுங்கை

இதனடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும். இவ்வாதனமானது 5/66 கிராம சேவையாளர் பிரிவிலும் யாழ்ப்பாணம் பிரதேசசெயலர் பிரிவிலும் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள்ளும் அமைந்துள்ளது.

தற்போது இவ்வாதனத்தை யோன் கரன்ஸ் கிறிஸ்ரின் வின்சன் டிபோலும் பெண் தர்சிகாவும் என்பவர்கள் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யோன் கரன்ஸ்கிறிஸ்ரின் வின்சன் டிபோலும் பெண் தர்சிகாவும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C-4354)

# கலாசாரப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கரைச்சி பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் கலாசாரப் பெருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரைச்சி கலாசாரப் பேரவைத் தலைவரும் பிரதேச செயலாளருமான த.முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி அஜிதா பிரதீபன், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி திருநகர், ஓய்வுநிலை ஆசிரியை ஆலோசகரும் சமய, சமூக, கலை, இலக்கிய விற்பன்னருமான திருமதி. செல்வராணி சோமசேகரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# கால்நடைகள் ஐந்து (பசு) பகிரங்க ஏலவிற்பனை

முல்லை மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான பண்ணை 9 ஆம் வட்டாரம் நந்திக்கடல் கரை மு.புதுக்குடியிருப்பில் அமைந்துள்ளது. அங்குள்ள (கன்றுகள் இன்றி பால் பசுக்கள் பால் 10 லீற்றர் வரை ஒரு நாளில் இரு தடவைகளில் கறக்க முடியும்) நல்லினக் கால்நடைகளில் ஐந்து 2025.11.26 அன்று மு.ப 10.00 மணிக்கு அப் பண்ணையில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

இதன் கேள்விதாரர்கள் மீளப்பெறத்தக்க ரூபா 10000.00 செலுத்தி கேள்வியில் பங்குபற்றலாம். கேள்வித் தொகைக்கு உடன்பட்டு விட்டு பின்பு மறுக்குமிடத்து ரூபா 10000.00 மீள வழங்கமுடியாத நிதியாக பண்ணை பொது நிதிக்கு மாற்றப்படும்.

**தலைவர்,**
**சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,**
**ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.**
**தொடர்பு இலக்கம்: 024 324 8603, 077 345 9178, 070 212 6196, 077 923 6831**

(C-4356)

# ஆதன பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 19 அனாதை விடுதி வீதி 22/2 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மயிலு சிவகுருவின் உரிமையாளர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு ரி.எம். அந்தோனிப்பிள்ளை முகதாவில் 2004.08.09ஆம் திகதி 2269 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் "புங்கடியிற்புலம்" குளி 13 அளவு கொண்ட ஆதனத்தை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதி 6 ஆம் எனும் இடத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரி பாலச்சந்திரனும் பாலக்குகநாதன் பொன்னம்பலமும், ஞானாம்பிகை பொன்னம்பலமும், கணேசானந்தன் பொன்னம்பலமும் ஆகியோர் குறித்த ஆதனம் யாழ் மாவட்டம் ஆனைக்கோட்டை சங்கரப் பிள்ளை வீதியைச் சேர்ந்த மரியதாஸ் ஜோன் பிலிப்பும் பெண் நசேந்தினியும் ஆகியோருக்கு அறுதி உறுதி நிறைவேற்றியுள்ளனர்.

அதன் பின்னர் மரீயதாஸ் யோன் பிலிப்பும் பெண் நசேந்தினியும் பிரசித்த நொத்தாரிசு ஜெ.எஸ்.ஏ. மதுரநாயகம் முகதாவில் 14.03.2012 ஆம் திகதி 437ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் புங்கன்குளம் வீதி இல 22 ஐ சேர்ந்த நித்தியானந்தன் பிரசாந்தன் பெண் யசோதரா என்பவர்களுக்கு அதே அளவுகொண்ட ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

நித்தியானந்தன் பிரசாந்தனும் பெண் யசோதராவும் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 2015.05.11 ஆம் திகதி 3907 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செபஸ்ரியாம்பிள்ளை டெய்சிராணி என்பவருக்கு அதே அளவு கொண்ட ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணம் பாசையூர் புதுக்குடியிருப்பு இல 14 ஐ சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை கைம்பெண் டெய்சிராணி என்பவர் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2017.04.04 ஆம் திகதி 7075 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் அவரது மகள் சிலுவைராஜ் அல்போன்ஸ் பெண் மேரிசயந்தினி என்பவருக்கு நிலப்பரப்பு குளி 13 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை அறுதியாக நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி, கோவிற்பற்று சிவியாதெரு இறை "புங்கடியிற்புலம்" உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ் சுப்பிரமணியம் அவர்கள் 2004.06.15 ஆம் திகதியில் துண்டு 1-6 எனப்பிரிவிட்டு வரைந்த 473 ஆம் இலக்கப்படத்தின் படி விஸ்தீரணம் நிலபரப்பு 10 குளி 13 இதில் துண்டு 3 எனும் பாகம் விஸ்தீரணம் குளி 13 உம் அதற்குச்சேர்ந்தவைகளும்

கிழக்கு - குறித்த படத்தில் துண்டு 4 எனும் பாகம்
வடக்கு - குறித்த படத்தில் துண்டு 2 எனும் பாகம்
மேற்கு - கையொழுங்கை
தெற்கு - குறித்த படத்தில் துண்டு 5 எனும் பாகம்

இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை சிலுவைராஜ் அல்போன்ஸ் பெண் மேரிசயந்தினி என்பவர் தனது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிலுவைராஜ் அல்போன்ஸ் பெண் மேரிசயந்தினி எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**


(C-4355)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரஷ்யாவுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் நாடுகளுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள், மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதன்படி, ரஷ்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளின் இறக்குமதி பொருட்களுக்கு 500 சதவீத மேலதிக வரியை விதிக்கவுள்ளதாக ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் மூன்றாண்டுகளைக் கடந்தும் தொடர்கிறது. இந்தப் போரை நிறுத்த பல்வேறு முயற்சிகளை உலக நாடுகள் எடுத்தும், அதற்கான பலன் இதுவரை கிடைக்கவில்லை.

இந்த நிலையில், ரஷ்யாவுக்கு எதிரான மிகக் கடுமையான சட்டமூலத்தை, சில செனட் சபை உறுப்பினர்கள் உருவாக்கியுள்ளதாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சட்டமூலத்தில், ரஷ்யாவுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் நாடுகள் மீது, 500 சதவீத கூடுதல் இறக்குமதி வரியை விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)



## இந்தத் தீர்ப்பு பாரபட்சமானது அரசியல் உள்நோக்கம் கொண்டது

## சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு குறித்து ஷேக் ஹசீனா

(டாக்கா)

டாக்காவில் உள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பு பாரபட்சமானது. அரசியல் உள்நோக்கம் கொண்டது என நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள பங்களாதேஷ் நாட்டின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் 2024 ஆம் ஆண்டு தொடர்ச்சியாக நடந்த போராட்டங்களின்போது ஷேக் ஹசீனா தனது அரசியல் மற்றும் பதவி பலத்தை பிரயோகித்து பிறப்பித்த கடுமையான உத்தரவுகளால் பல வன்முறைகளும் உயிரிழப்புகளும் ஏற்பட்டதாக நேற்று முன்தினம் டாக்கா நீதிமன்றத்தில் • உறுதிப்படுத்தப்பட்டது.

அவருக்கு எதிரான வழக்கு விசாரணைகளின்போதும் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தால் தலைமறைவாக இருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலேயே இவ்வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டு, ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனக்கு எதிராக டாக்கா சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் விதித்த மரண தண்டனை குறித்து ஷேக் ஹசீனா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

"நான் எதைப் பற்றியும் கவலைப்படப் போவதில்லை.

எனக்கு எதிராக அறிவிக்கப்பட்டுள்ள இந்த தீர்ப்பு, ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஒரு மோசடித் தீர்ப்பாயத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு பாரபட்சமானது. அரசியல் உள்நோக்கம் கொண்டது.

கடந்த ஆண்டு போராட்டம் நடந்தபோது நாங்கள் கட்டுப்பாட்டை இழந்தோம்.

எனவே, அதனை குடிமக்கள் மீதான முன்கூட்டிய திட்டமிட்ட தாக்குதல் என்று வகைப்படுத்த முடியாது" என குறிப்பிட்டுள்ளார். (நி)



## 13 மாதங்களின் பின் ஜப்பானில் வெடித்த எரிமலை

## சுமார் 30 விமான சேவைகள் ரத்து

(டோக்கியோ)

ஜப்பானில் 13 மாதங்களாக உறங்கிக் கொண்டிருந்த எரிமலை வெடித்துச் சிதறியதால் அங்கு விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

எரிமலைகள் அதிகம் காணப்படும் ஜப்பானில் எப்போது எரிமலை விழித்து, நெருப்பு பிழம்புகளை உமிழத் தொடங்கும் என்று தெரியாது.

இந்நிலையில் 13 மாதங்களாக அமைதியாக இருந்த சகுராஜிமா என்ற எரிமலை இப்போது நெருப்பை உமிழத் தொடங்கி இருக்கிறது.

இந்த எரிமலை ககோஷிமா நகரத்தின் அருகில் உள்ளது. அடுத்தடுத்து 2 முறை நெருப்பு பிழம்புகளை உமிழ்ந்ததால் வானில் கிட்டத்தட்ட 4.4 கிலோ மீற்றர் தூரம் புகை மண்டலமாகவும், புழுதியாகவும் காட்சி அளித்தது.

இது அந்நாட்டின் விமான சேவையை முற்றிலும் பாதித்துள்ளது.

வான்வழி பாதையில் புகை, சாம்பல்கள் நிரம்பிக் காணப்பட்டதால் ககோஷிமா விமான நிலையத்திலிருந்து புறப்பட வேண்டிய 30இற்கும் மேற்பட்ட விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு நகரங்களுக்குச் செல்ல வேண்டிய விமானங்களின் வருகை, புறப்பாடுகளும் தாமதமாகி இருக்கின்றன.

சகுராஜிமா எரிமலை ஜப்பானின் பிரபலமான எரிமலையாகும்.

2019ஆம் ஆண்டு நெருப்பு பிழம்புகளை உமிழ்ந்த போது, வானில் 5.5 கி.மீ புகை மண்டலமாகவும், தூசுகள் நிரம்பிக் காணப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# காசாவிற்கான ட்ரம்பின் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை ஆதரவு

**(ஜெனீவா)** ••••••••••••••••••••••

**காசாவில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் திட்டத்தை ஆதரித்து, பாலஸ்தீனப் பகுதிக்கு ஒரு சர்வதேச நிலைப்படுத்தல் படையை அங்கீகரிப்ப தற்கான அமெரிக்காவால் வரைவு செய்யப்பட்ட தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் திங்களன்று நிறைவேற்றியது.**




இந்தத் தீர்மானத்திற்கு இங்கிலாந்து, ரான்ஸ் மற்றும் சோமாலியா உட்பட 13 ாடுகள் ஆதரவு தெரிவித்தன.

யாரும் இந்த முன்மொழிவுக்கு திராக வாக்களிக்கவில்லை.

ரஷ்யாவும் சீனாவும் வாக்களிக்கவில்லை.

அமெரிக்காவின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது "போர் நிறுத்தத்தை வலுப்படுத்துவதில் ஒரு முக்கியமான 'படியாகும்" என்று ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

எனினும், பாலஸ்தீனியர்களின் உரிமைகள் மற்றும் கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாகக்கூறி, ஹமாஸ் இந்தத் தீர்மானத்தை நிராகரித்துள்ளது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் டெலிகிராமில் பதிவிட்ட ஹமாஸ்,

இந்தத் திட்டம், "காசா பகுதியில் ஒரு சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையை திணிக்கிறது,

இதை நமது மக்களும் அவர்களது பிரிவுகளும் நிராகரிக்கின்றன" என்று கூறியது.

இந்தத் தீர்மானத்தின் கீழ், எல்லைப் பகுதிகளைப் பாதுகாக்கவும், ஹமாஸ் உள்ளிட்ட அரசு சாரா ஆயுதக் குழுக்களை நிரந்தரமாக நிராயுதபாணியாக்கும் செயல்முறையை உறுதி செய்யவும், புதிதாகப் பயிற்சி பெற்ற மற்றும் சரிபார்க்கப்பட்ட பாலஸ்தீனிய பொலிஸாருடன் இணைந்து இஸ்ரேல் மற்றும் எகிப்துடன் சர்வதேச நிலைப்படுத்தல் படை இணைந்து செயற்படும்.

இதுவரை, அங்குள்ள பொலிஸார் ஹமாஸின் அதிகாரத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றனர்.

மேலும், பாலஸ்தீனிய தொழில்நுட்ப, அரசியல் சார்பற்ற குழுவின் நிர்வாகத்தை மேற்பார்வையிடும், காசாவின் மீள் கட்டமைப்பு மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதை மேற்பார்வையிடும் அமைதி வாரியம் (BoP) எனப்படும் ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்குவதற்கும் பாதுகாப்பு சபை ஒப்புதல் அளித்தது.

இரண்டு வருடப் போருக்குப் பிறகு காசாவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிதியுதவி உலக வங்கியின் ஆதரவுடன்கூடிய அறக்கட்டளை நிதியிலிருந்து வரும் என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பேருந்துகள் மீது விழுந்த பாறைகள்

- 6 பேர் உயிரிழப்பு
- 19 பேர் காயம்
- வியட்நாமில் சோகம்

(வியட்நாம்)

வியட்நாமில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் பேருந்து மீது கற்பாறைகள் வீழ்ந்ததில் 6 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 19 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

32 பயணிகளுடன் சென்ற பேருந்து மீது பாறைகள் வீழ்ந்ததால் பேருந்தின் முன்பகுதி நசுங்கியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


மண்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து தடைப்பட்டதால், பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் அனுமதிக்கத் தாமதமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியத்தை இழக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள்




(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

1971ஆம் ஆண்டு முதலாம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை அகற்றுவது குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது கொள்கை பிரகடனத்தை வெளியிட்டிருந்தது.

இந்தக் கொள்கை பிரகடனத்தின் அடிப்படையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை ரத்து செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத்துணைக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதிய உரிமையை ரத்து செய்வதே இந்த சட்டமூலத்தின் நோக்கமாகும்.

இந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்காக கடந்த ஜீன் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கொள்கை ரீதியான அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டம் வரைவு செய்யப்பட்டு அது குறித்துச் சட்டமா அதிபரின் ஆலோசனையும் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பாராளுமன்றில் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்தச் சட்டமூலத்தை வர்த்தமானியில் அறிவிப்பதற்கும் அதன் பின்னர் அனுமதி பெற்றுக்கொள்வதற்காக பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச் சட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடப் பட்டுள்ளது.

ஏற்கனவே ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அவர்களுடைய வாழ்க்கைத் துணைக்கு வழங்கப்பட்டுவரும் ஓய்வூதியம் ரத்து செய்யப்படும் என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்துள்ளார்.

எவ்வாறு எனினும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகைகள் அவர்களிடமிருந்து மீள அறவீடு செய்யப் படாது என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# விவசாயிகளுக்கு 25,000ரூபா உரமானியம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2025/ 2026 காலபோக நெற்செய்கைக்காக உரமானியமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 10 கமநல சேவை நிலையங்களிலும் இது வரை 6ஆயிரத்து 256 விவசாயிகளுக்கு 4 ஆயிரத்து 649.1752 ஹெக்டேயருக்கு நூறு கோடியே பதினொரு இலட்சத்து அறுபத்தொராயிரத்து நானூற்று எண்பத்தாறு ரூபா தொகை அவர்களின் வங்கி கணக்குகளுக்கு வைப்பில் இடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள ஏனைய விவசாயிகளுக்கு தொடர்ந்து வைப்பிலிடும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேயருக்கு 15ஆயிரம் ரூபாவாக இருந்த உரமானியம் தற்போது 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(8-316)


# பொது அறிவித்தல்

## மாநகர சபை, யாழ்ப்பாணம்

## பாதீடு – 2026

யாழ். மாநகர சபையின் 2026ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைபு) 2025.11.18 ஆம் திகதி தொடக்கம் 2025.12.02 ஆம் திகதி வரை

யாழ்.பிரதேச செயலகம்
நல்லூர் பிரதேச செயலகம்
யாழ். மாநகர சபை பொதுசனத் தொடர்பு பகுதி
யாழ்.பொது நூல் நிலையம்

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ்வரைபு பாதீட்டினை பரிசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளினை எதிர்வரும் 2025.11.26 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாநகர சபை செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திருமதி.மதிவதனி விவேகானந்தராஜா,
முதல்வர், மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-4359)



# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 08 – 02 – 1961

இறப்பு 17 – 11 – 2025

அமரர். **எந்திரி சுந்தரலிங்கம் சுந்தரகுமார்**

ஓய்வு நிலை மாகாணப் பொறியியல் கட்டுமானப் பிரதிப் பணிப்பாளர்

**Member of the Board of Management-CANE SRI LANKA**
**Project Engineer**

உடனிற்று கொல்லும் உறுபிணி உற்றோர் படுந்துன்பம் தீரவென்று கருமமாற்றும் எம்மன்றம்
நெடுநாளாய் கண்ட கனவுதனை நனவாக்க நெடுதுயர் கட்டிடங்கள் விசாலமாய் அமையவென்றே
ஒப்பரிய கருமமாற்ற பொறியியலாளராய் நாம் பெற்றதோர் உயர்பேறாய்
அமைந்த பெருங்குணத்தோன்! தன்னிகரில்லா தகைமை பெற்றே,
கண்ணியமாக அரும்பணி பலவும் ஆற்றி,
உற்சவ மூர்த்தியாய் எம்மன்றில் உலா வந்த பெருமகனார் -
எம் கட்டிடப் பொறியியல் பணியாவும் உள்ளத்தால் உவந்தே ஏற்று, ஈடில்லாச் சேவையாற்றி,
திட்டங்கள் யாவும் நுட்பமாய் மெருகேற்றி, ஞாயிறு பிற்பகல் முகாமைத்துவ சபையைக் கூட்டி,
யாவையும் தெளிவுற விளக்கி, விடைபெற்றேகி பேசிய வார்த்தையாவும்
எம் செவியை விட்டகல முன்னர் விடை தந்த கண்கள் எம் விழியை விட்டகல முன்னர்
புன்னகை பூத்த வதனம் எம் நெஞ்சை விட்டகல
முன்னர் அந்தியுள் உயிர் விட்டே ஏகினீர் அமரருலகு!
"ஏற்குமோ எம் இதயம்! தாங்கிடுமோ எம் நெஞ்சம்" நெருநல்
உளன் ஒருவன் இன்றில்லை என்ற மறைமொழியை
அர்த்தமாக்கி ஏகினீர் பேரின்பம்! கையறு நிலையதாலே கண்ணீரால் அர்ச்சித்தோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

**BOARD OF MANAGEMENT**
**CANE UK - CANE SRI LANKA & STAFFS**





யா/திருநெல்வேலி தெற்கு, பரமேஸ்வராச் சந்தி

# அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்

## வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் - 2025

**காலம் : 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : காலை 9.30 மணி**
**இடம் : ஆலய மண்டபம்**
**தலைமை : திரு.பொ.கேசவராஜ்**
**(பரிபாலனசபைத் தலைவர்)**

11.11.2025 செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக பொதுக் கூட்டத்திற்கான திகதி தீர்மானிக்கப்பட்டதை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

**நிகழ்ச்சி நிரல்**

- இறைவணக்கம்
- வரவேற்புரை - செயலாளர்
- தலைமை உரை - தலைவர்
- கருத்துரை - உப தலைவர் "ஆலய நிர்வாகம் / பரிபாலனம் தொடர்பான புரிந்துணர்வுமிக்க தேவைப்பாடுகள்"
- பொதுச்சபை உறுப்பினர்களின் கருத்து பரிமாற்றம்
- புதிய நிர்வாகசபைத் தெரிவு
- நன்றியுரை - புதிய செயலாளர்

**பொதுச்சபை உறுப்பினர்கள் மஹோற்சவ (திருவிழா) உபயகாரர்கள் மற்றும் ஏனைய உபயகாரர்கள் அனைவரையும் தவறாது பொதுக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.**

**நன்றி.**

**திரு.ச.சசிகுமார்,**
**செயலாளர் பரிபாலனசபை (நிர்வாகசபை).**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதிகளிலும் மூலிகை மருந்துப் பொருட்களிலும் சிற்றுண்ணிகள் பூச்சிகள்! அவதானம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


உணவு பொதியிடல் (Food packaging) அதனை பொதியிடுவதற்கு பயன்படும் பொலித்தீன் உறையை சீல் செய்தல் மற்றும் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைப்பொருட்களை (Raw materials) களஞ்சியப்படுத்தல் மற்றும் வாய்மூலம் உட்கொள்ளும் குறிப்பிட்ட சித்த மருந்துகள் என்பனவற்றின் தரம் பற்றிய சந்தேகம் முன்வைக்கப்பட்டதனால் அவற்றை ஆய்வுக் கருவாக எடுத்து சந்தையில் கிடைத்த குறிப்பிட்ட உணவுப் பொதிகளை மருத்துவ மூலிகைப் பொருட்களை (medicinal plant parts) எமது இறுதியாண்டு மாணவி செல்வி ரூபிஷிகா கனகரட்ணம் அவர்கள் ஆய்வுக் கருவாக எடுத்து ஆராய்ந்த முடிவுகளை எம்மினிய உறவுகளுக்கு அறியத்தருகின்றேன்.

இதில் பொதியிடலில் உள்ள தவறுகள் மற்றும் பிரச்சினைகள், பொதியிடலுக்கு பயன்படுத்தும் பதார்த்தங்கள் (Packaging materials) இவற்றுடன் மூலிகை மருந்து தயாரிப்பதற்கு பயன்படுத்தும் தாவர பாகங்களை முறையாகச் சேகரித்து பதப்படுத்தி காயவைத்து அவற்றை களஞ்சியப்படுத்தல் மற்றும் இவ்வாறான பாகங்களை பயன்படுத்தி தயாரிக்கப்படும் மூலிகை மருந்துகளில் காணப்படக்கூடிய பிரச்சினைகளை மையப்படுத்தி இக்கட்டுரையினூடாக விளக்க முயன்றிருக்கின்றோம்.

சாதாரணமாக பொதியிடல் பதார்த்தங்களாக பலவகையான பொலித்தீன் பைகள் அழகான வர்ணங்களுடன் பல்வேறு கனதியில் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக நூடில்ஸ் மற்றும் பிஸ்கட் வகைகள் பொதிசெய்திருக்கும் பொலித்தீன் வகையான உறைகளை அவதானித்தால் வேபர்ஸ், மலிபன் ரக பிஸ்கட்கள் மிகவும் மெல்லிய கனதி குறைந்த பொலித்தீனினால் பொதிசெய்யப்பட்டிருக்கும். பல கண்கவர் வர்ணங்களில் அழகாக பிரிண்ட் செய்யப்பட்டு பயன்படுத்தப்படும். இவ்வாறான உறைகளை சிறிய சிவப்பு எறும்புகள் இலகுவில் துளைத்து உட்சென்று உள்ளே உள்ள உணவை குறிப்பாக பிஸ்கட், நூடில்ஸ் மற்றும் பதப்படுத்திய உணவுகளை உண்பதனால் அவற்றின் தரத்தில் குறிப்பாக மொறு மொறு என்னும் தன்மையில் மாற்றமேற்பட்டு இளகி பாதிக்கப்பட்ட உணவாகி விடும் அத்துடன் இவ்வாறான துளைகளினூடாக சிற்றுண்ணி (mites) போன்றவை உட்செல்லவும் வாய்ப்பாகி விடுகின்றது. அதிலும் பிஸ்கட்களை சிறுகடைகளில் வைத்திருக்கும் போது அவை பாதுகாப்பானவையாக வைக்கப்படாததினாலும் இந்நிலைமை ஏற்பட வாய்ப்புண்டு.

அழகான உறைகளாயினும் கனதி குறைந்த பொலித்தீனினால் பொதி செய்யப்பட்ட உணவு வகைகள் மற்றும் பிஸ்கட்டுகளை அவற்றின் தன்மை கெடாது தரங்குறையாமல் விற்பனை செய்வதனை உறுதி செய்வது முக்கியமானதாகும்.

உணவு களஞ்சியப்படுத்தலில் ஏற்படும் பூச்சி பீடைகளான வண்டுகள் மற்றும் நீள்மூஞ்சி வண்டுகளினால் சேதம் ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறு முறையாக பொதிசெய்யப்படாத உணவு பைக்கற்றுகளில் சிற்றுண்ணி தாக்கமும் ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிந்தது. அநேகமான நூடில்ஸ், வேபர்ஸ் மற்றும் மாரி பிஸ்கட் என்பனவற்றின் உறைகள் மெல்லியதாகவும் அதன் மூலம் இந்த களஞ்சிய பீடைகள் தொற்று ஏற்படுவதும் காணமுடிந்தது.



பொதிசெய்யும் போது முறையாக சீல் வைக்கப்படாமையும் இந்த களஞ்சியப்பீடைகள் பொதியினுள் பெருகுவதற்கு வாய்ப்பாகிவிடுகின்றது. உணவு பொதிகளில் காணப்படும் சிற்றுண்ணியை பல்கிப் பெருகவிட்டால் அவற்றினால் அந்த உணவுப்பொருளின் தரம் (Food quality) மிகவும் குறைந்துவிடும். அந்த உணவுப்பொருட்களில் சிற்றுண்ணிகளின் முட்டை மற்றும் அவற்றின் இளம் பருவங்களினையும் அதிகமாக காணலாம். இவற்றை நுணுக்குக்காட்டிகள் மூலமாகவே காணமுடியுமாதலால் பொதுமக்களின் கண்களுக்குள் இவை தென்படாது.

சிற்றுண்ணிகளின் ஊடுருவலால் பொருட்களின் தன்மை கெட்டுவிடுகின்றது. அந்த உணவுப் பொருட்களில் சிற்றுண்ணிகளின் முட்டைகள் அவற்றின் இளம் பருவங்கள் என அனைத்தும் காணப்படும். இவற்றிற்கு அதிக வெளிச்சம் தேவையற்றதாக இருப்பதனாலும் ஆகக்குறைந்த ஒட்சிசன் அளவையும் கொண்டு இலகுவில் பெருகிவிடுகின்றன.

இவை தவிர சிற்றுண்ணிகள் எவையென்பதனை இனங்காண முடிந்தால் அவற்றை இலகுவில் கட்டுப்படுத்துவது சுலபமாகிவிடும. சிற்றுண்ணிகளின் தொற்று ஏற்பட்டதனை நுணுக்குக்காட்டி மூலமே அவதானிக்க முடிவதனால் எமது மக்கள் உணவுப் பொருட்களிலும் உணவு பொதிசெய்த உறைகளையும் அவற்றின் கனதியையும் தெரிவுசெய்து பயன்படுத்தல் நல்லது.

உணவுப்பொருட்கள் தவிர மூலிகை மருந்துகள் தயாரிப்பதற்காக பெறப்படும் தாவரபாகங்களான இலைகள், தண்டுகள், வேர்கள், கிழங்குகள் என்பனவற்றில் அவை முறையாக சேகரிக்கப்படாத பட்சத்தில் அவற்றில் சிற்றுண்ணிகளும் பூஞ்சணத் தொற்றும் ஏற்படுவதனை அவதானிக்கலாம்.

இத்தாவர பாகங்கள் சேகரிக்கப்பட்டு முறையாக காயவைக்கப்பட்டு அவற்றை மருந்து தயாரிக்க பயன்படுத்தினாலன்றி அவற்றிலும் சிற்றுண்ணி மற்றும் பூஞ்சணத் தொற்று ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

குறிப்பாக சித்தரத்தை, பேரரத்தை மற்றும் முறையாக தயாரிக்கப்படாத குளிகைகள் என்பனவற்றிலும் இத்தாக்கங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் வாய்மூல மருந்தாக வழங்கப்படும் மூலிகை மருந்துகளை அவசியம் தரநிர்ணயத்திற்கு உட்படுத்தி அவற்றில் எந்தவிதமான தொற்றுக்களும் இல்லாத வகையில் அவை மருத்துவ தேவைக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். வடகிழக்கு இணைந்திருந்த ஆட்சியின் போது அதனது செயலாளராக கடமையாற்றிய மறைந்த உயர்திரு ரங்கராஜ் அவர்கள் மூலிகை மருந்துகளுக்கான தரநிர்ணயஞ் செய்யும் அமைப்பொன்றை வடபகுதியில் நிறுவுவதற்கு அக்காலகட்டத்தில் நடைபெற்ற கருத்தரங்கின் மூலம் முயற்சிகளை எடுத்திருந்த போதிலும் இற்றைவரை சித்தமருத்துவ மருந்துகளுக்கான தரநிர்ணய மையம் வடபகுதியில் இன்னமும் உருவாகவில்லை என்பதனை நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

தனியார் சித்த மருந்துகளை பாரம்பரியமாக தயாரிக்கும் இவர்களுக்கு உதவுவதற்காகவும் அந்த மருந்துகளை தரநிர்ணயஞ் செய்யும் வாய்ப்பினை வழங்குவதன் மூலம் அவர்களுக்கான மருத்துவ உற்பத்தி சிபார்சினை முறைப்படி செய்வதற்கும் இந்த அமைப்பை அவசியம் உருவாக்கப்படல் வேண்டும். எதேச்சையாக பெறப்பட்ட பாரம்பரிய மருந்துகளை செய்ய பயன்படும் மூலப் பொருட்களை ஆய்வு செய்வதில் பெறப்பட்ட இந்த விடயங்கள் அதி முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட்டு சித்த மருத்துவ மருந்துகளுக்கான தரநிர்ணயத்தை வழங்கும் நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதற்கு இக்கட்டுரை மூலம் பரிந்துரைக்கப்படுகின்றது.

உணவுப் பொருட்களில் முறையற்ற அல்லது மென்மையான பொலித்தீன் உறைகளைப் பயன்படுத்துவதனால் அவ்வுணவுப் பொருட்களில் காணப்படும் சிற்றுண்ணி மற்றும் பூச்சி தாக்கத்தையும் சிலவேளைகளில் காணப்படும் பூஞ்சணத் தொற்று என்பன ஏற்படுவதனை கண்காணித்து தடுப்பதுடன் இவ்வாறான தரக்குறைவை சீர்திருத்த அந்தந்த நிறுவனங்களுக்கு அறிவிப்பதோடு சித்த மருத்துவ மருந்துற்பத்தியை பெருக்குவதற்கும் அவற்றின் தரத்தை உறுதிசெய்வதற்கும் சுற்றுலா வரும் சுற்றுலா பயணிகளுக்கான தரமான உள்ளூர் மருத்துவத்தை செய்வதற்கு பயன்படுத்தும் மருந்தை தரமானதாக உறுதி செய்ய வடமாகாணத்தில் தரநிர்ணய அமைப்பு அவசியம் ஏற்படுத்தப்புட்டு அதன் மூலம் சித்தமருத்துவர்களுக்கு தேவையான மருந்துகளின் தரத்தை ஆய்ந்தறிந்து தெரியப்படுத்த அனைத்து ஆவன செய்தல் நன்று. தரமற்ற உணவுகள் உடலுக்கு தீங்கானதாகவும் அமையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 913





மகாராணியும் அவ்விதம் ஆக்ஞாபித்தார்கள். ஆனால் அவரை அழைத்து வருவது எளிய காரியமாயில்லை. அவர் உயிரோடிருப்பதாகச் சொன்னால், தாங்கள் நம்புவது சிரமமாயிருக்கும். ஆகையால் எப்படியும் அவரை இந்த ஊரில் கொண்டு வந்து சேர்த்த பிற்பாடு தங்களிடம் சொல்ல எண்ணினேன். நேற்று மாலை கோட்டை வாசலுக்குக் கிட்டத்தட்ட வந்த பிறகு மந்தாகினி தேவி மறைந்து விட்டார். அவருக்குப் பதிலாக இந்தப் பெண் பல்லக்கில் வந்தாள். இன்றைக்கெல்லாம் தேவியைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தோம். அவர் பழுவூர் அரண்மனைத் தோட்டத்தின் மதில் ஏறிக் குதித்ததைப் பார்த்து விட்டுத்தான் என் சீடனும் அவ்வாறு மதில் ஏறிக் குதித்தான். ஆனால் இந்தத் தேவி அகப்படவில்லை. திருமலையைப் பழுவூர் ஆட்கள் பிடித்துக் கொண்டு வந்தார்கள். சக்கரவர்த்தி! என் சீடனை அக் குற்றத்துக்காக மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்."

"மன்னிப்பதற்கு இது ஒரு குற்றந்தானா? எவ்வளவோ இருக்கிறது! அப்புறம் சொல்லுங்கள்!"

"அப்புறம், இன்று சாயங்காலம் வரை காத்திருந்தும், பழுவூர் அரண்மனைக்குள்ளே தேடியும், இவரைக் காணவில்லை. தாங்கள் சற்று முன் கண்ணயர்ந்திருந்த போது நாங்கள் எல்லாரும் அடுத்த அறையில் இவரைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம். இவர் எங்கே மறைந்திருக்கக் கூடும் என்றும், இதையெல்லாம் பற்றித் தங்களிடம் எப்படிச் சொல்லுவது, யார் சொல்லுவது என்றும் யோசனை செய்து கொண்டிருந்தோம். அதற்குள் இவராகவே எப்படியோ தங்கள் சந்நிதிக்கு வந்து சேர்ந்திருக்கிறார். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று!"

சக்கரவர்த்தி அப்போது மந்தாகினி தேவி இருந்த இடத்தை நோக்கினார். குந்தவை, பூங்குழலி முதலியோர் அந்தப் பெண்மணியின் நெற்றியிலிருந்த காயத்தை ஈரத் துணியினால் துடைத்து விட்டு மருந்து கலந்த சந்தனக் குழம்பை அதன் பேரில் அப்புவதைக் கவனித்தார்.

"விடங்கர் மகளே! உன் அத்தையின் நெற்றியில் காயம் எப்படி ஏற்பட்டதென்று கேட்டுச் சொல்லுவாயா?" என்றார்.

பூங்குழலி இரண்டு அடி முன்னால் வந்து, "கேட்டேன், பிரபு! ஆனால் அத்தை சொல்லும் காரணம் எனக்கே சரியாக விளங்கவில்லை" என்றாள்.

"என்னதான் சொல்லுகிறாள்? நான் விளக்கை எறிந்ததால் ஏற்பட்ட காயம் என்று சொல்லுகிறாளா?"
"இல்லை, இல்லை! மலைமேல் முட்டிக் கொண்டதால் காயம் பட்டதாகச் சொல்கிறார். இரத்தம் வழிந்ததை அவர் கவனிக்கவில்லையென்றும் கூறுகிறார்."

சுந்தர சோழர் அப்போது ஒரு மிக அபூர்வமான காரியம் செய்தார். கலகல வென்று நகைத்தார்! அம்மாதிரி அவர் சிரித்ததை மற்றவர்கள் பார்த்துப் பல வருடங்கள் ஆயின. மீண்டும் மீண்டும் அவர் நினைத்து நினைத்துச் சிரித்தார். அனைவரும் அவரைக் கவலையுடன் உற்றுப் பார்க்கத் தொடங்கினார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## துறவியின் பொறுமை



கங்கை நதிக்கரையில் துறவி ஒருவர் கடினமான தவத்தில் ஈடுபட்டிருந்தார்.

அவருடைய தவத்தின் நோக்கம், தேவலோகம் போகவோ, பெரிய பதவி பெற வேண்டும் என்பதோ அல்ல! அதற்கு மாறாக, தமக்குப் பயன்படாத இந்த உடல், பிராணிகளுக்காகவாவது பயன்படட்டுமே என்ற எண்ணம் கொண்டிருந்தார். அவரைச் சுற்றிலும் கழுகுகளும், கோட்டான்களும் வட்டம் இட்டுக் கொண்டிருந்தன.

சற்று தொலைவில் உள்ள நகரத்தின் அரசன், தன் ராணிகளுடன், ஆற்றுக்கு அருகில் இருந்த மலர்ச் சோலைக்குச் சுற்றுலா வந்து இருந்தான். அப்போது, அரசன் அளவுக்கு அதிகமாக மது அருந்தி விட்டதால், போதையில் அங்கேயே விழுந்து கிடந்தான்.

அந்த நேரத்தில் அரசனின் ராணிகள் பொழுது போக்குவதற்காக மலர்ச் சோலையின் வனப்பைக் களிக்கச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தனர். அருகில் துறவி தவத்தில் இருப்பதைக் கண்டனர்.

அவரை நெருங்கிப் பார்த்தபோது, அவருடைய முகப் பொலிவு, ராணிகளுக்கு மரியாதை உணர்வை ஊட்டியது. அதனால் அவர்கள் துறவியைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். ராணிகளைக் காணாமையால் தேடி வந்தான் அரசன்.

துறவியைச் சுற்றி, அவருடைய முகப் பொலிவைப் பார்த்துக் கொண்டு ராணிகள் தங்களை மறந்தபடி இருந்தனர். அந்த நிலையைப் பார்த்த அரசன், சினம் கொண்டான். பொறாமை அவனை உலுக்கியது.

ஆத்திரம் அடைந்த அரசன், தன் உடைவாளைக் கொண்டு துறவியின் அங்கங்களைச் சிதைத்தான்.

அந்தச் சமயத்தில் அங்கே ஒரு பேய் உருவம் தோன்றியது. "துறவியே! உத்தரவிடு உன் அங்கங்களைத் துண்டித்த அந்தக் கொடுமைக்கார அரசனைக் கொன்று விடுகிறேன்." என்றது. துறவி அதற்குச் சம்மதிக்கவில்லை.

"உன் கருணைக்கு நன்றி! அரசன் எனக்கு கெடுதல் செய்யவில்லை. என் அங்கங்களை அவன் வெட்டியதால், சுற்றிவட்டமிடும் பிராணிகளுக்குப் பேருதவி செய்திருக்கிறான். ஆகையால் நன்மை செய்துள்ள அவனை ஒன்றும் செய்யாதே" என்று கனிவுடன் சொன்னார் துறவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் உறுதி மற்றும் நம்பகத்தன்மை இயற்கையாகவே உங்கள் மீதான நம்பிக்கையை வளர்க்கும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புத்தர் சிலை விவகாரம் இந்தியா தலையிட வேண்டும்

திருகோணமலை கடலோரத்தில் புத்தர் சிலை நிறுவப்பட்டமை இந்த நாட்டில் மீண்டும் மத வாதத்தை தோற்றுவிக்கின்ற நடவடிக்கை என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

எதிர்வரும் 21ஆம் திகதி அநுர அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இணைந்து பேரணி நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள நேரத்தில், திருமலைக் கடலோரத்தில் புத்தர் சிலையை நிறுவுகின்ற காரியம் நடந்தாகியுள்ளதெனில், இதன் பின்னணியில் சிங்களப் பேரினவாத சக்திகள் இருப்பதை ஊகிக்க முடியும்.

ஆம், எந்தவித அனுமதிகளும் பெறப்படாமல், திருகோணமலைக் கடலோரத்தில் புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட போது அதுவிடயத்தில் பொலிஸார் உடனடியாகத் தலையிட்டு சிலையை அப்புறப்படுத்தியிருந்தனர்.

ஆனால் மீண்டும் அதே பொலிஸார் அதே இடத்தில் புத்தர் சிலையை வைத்துள்ளனர் எனும்போது, அரசாங்கம் – நீதிமன்றம் – பொலிஸார் என்ற கட்டமைப்புகளுக்கு அப்பால் இன்னொரு பலமான சக்தி இந்த நாட்டைக் கட்டுப்படுத்திவருகிறது. அதை மீறி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவாலும் எதுவும் செய்ய முடியாது என்ற உண்மை உணர்தற்குரியது.

இதை நாம் கூறும்போது புத்தர் சிலையைப் பொலிஸார் அகற்றியதை முதலில் கண்டித்தவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எனும்போது, அவரிடம் இருக்கக்கூடிய இன – மத வாதம் எத்தன்மையது என்பதை அறிய முடியும்.

கூடவே சட்டவிரோதமான முறையில் நிறுவப்பட்ட புத்தர் சிலையைப் பொலிஸார் அகற்றியது குற்றம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறுகிறார் எனில், இந்த நாட்டில் மதத்தின் பெயரால் மீண்டும் கலவரத்தை ஏற்படுத்துவதே அவரின் நோக்கம் என்று கூறுவதில் தவறில்லை.

உண்மை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணத் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு அளித்த வாக்குகளே அதிகம்.

இருந்தும் தனது சுயநல அரசியலுக்காக எதிர்க்கட்சித் தலைவர் என்ற பொறுப்பான பதவியையும் மறந்து; சட்டவிரோதமாக நிறுவப்பட்ட புத்தர் சிலைக்கு ஆதரவாக சஜித் பிரேமதாஸ கருத்துரைத்தமை தமிழ் மக்களுக்கு அவர் செய்த மிக மோசமான வஞ்சகமாகும்.

இந்த நிலையில்தான் சஜித் தலைமையிலான பொது எதிரணியில் நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இணைந்து கொள்ளவுள்ளனர்.

பரவாயில்லை. எல்லாம் எங்கள் தமிழ் அரசியல்வாதிகளின் வஞ்சகத்தனங்களால் ஏற்பட்ட ஈனத்தனங்களே இவை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

எதுவாயினும் திருகோணமலையில் சட்டவிரோதமாகப் புத்தர் சிலை நிறுவப்பட்டதை எதிர்த்து நீதிமன்றை நாடுவதுடன், குறித்த விடயத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்துக்குக் கொண்டு செல்வதும் கட்டாயமானதாகும்.

# பழைய பாவங்களைக் கழுவ வேண்டுமானால் சர்வதேச விசாரணைக்கு உடன்படுங்கள்

## பாராளுமன்றில் கஜேந்திரகுமார் விளாசல்

ஜே.வி.பி செய்த இன வழிப்புக் கொடூரங்கள் அனைத்தும் எம் மனதில் ஆறாத வடுவாக இன்னமும் நினைவில் நிற்கிறது என கஜேந்திரகுமார் எம்.பி நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்.

மகிந்த் ராஜபக்ஷ இறுதி இனவழிப்புப் போரை நடாத்திமுடிப்பதற்கு இனவாதத்தை மட்டும் மூலதனமாக்கிய போது அதனை சிங்கள மக்கள் மத்தியில் தீவிரமாக பிரசாரப்படுத்தி மக்கள் மயப்படுத்தி சிங்கள மக்களின் ஊர் ஊராகச் சென்று ஒவ்வொரு இராணுவ முகாம் முகாமாகச் சென்றும் அப்பாவிச் சிங்கள இளைஞர்களையும் இராணுவத்தையும் சிங்கள மக்களையும் இந்த இன வழிப்பு யுத்தத்திற்கு தயார்படுத்தியது உங்கள் முன்னாள் தோழர் விமல் வீரவன்சவும் மற்றும் இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் மற்றும் இங்கு முன் வரிசையில் இருக்கும் ஜே.வி.பி தோழர்களும் தான்.

நாங்கள் அதை ஒரு போதும் மறக்கவும் மன்னிக்கவும் போவதில்லை என்றாலும் நீங்கள் செய்த பழைய பாவங்களைக் கழுவி நீங்கள் பழையஜே.வி.பி இல்லை என்பதை மக்களுக்கு தெரியப்படுத்த விரும்பின் செய்த குற்றங்களுக்காக ஒரு பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணைக்கு உடன்படுங்கள்.

அனைத்து இராணுவத்தினரும் குற்றம் செய்தவர்கள் என்று நான் கூறவில்லை. அந்த இராணுவத்தில் இருந்தவாறு இராணுவத்தினரால் நடத்தப்பட்ட கொடூரக் குற்றங்களைக் கண்டு சகிக்க முடியாத சிலராலேயே யுத்தக் குற்றங்கள் பற்றிய காணொளிகள் வெளியே கசிய விடப்பட்டன.

என்னைப் பொறுத்த வரையும் இந்த உலகத்தை பொறுத்தவரையும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தமிழ் மக்கள் மீது கொடூரமான ஒரு இனப்படுகொலை அரங்கேற்றப்பட்டுள்ளது. நீங்கள் ஸ்ரீலங்கா இராணுவம் வடக்கு கிழக்கில் மிகச்சிறந்த பணியை ஆற்றுகின்றது என்று சொல்கின்றீர்கள்.

உங்களது இராணுவத்தின் பெயரை நீங்கள் பாதுகாக்க விரும்பினால் இனப்படுகொலை குற்றச்சாட்டில் இருந்து உங்கள் இராணுவத்தை விடுவிக்க விரும்பினால் அதற்கான ஒரே வழி சர்வதேச விசாரணைக்கு ஒத்துக் கொள்வது மட்டுமேயாகும் என்றார். (ம-7,30)

# பாதாள உலகக் குழுக்களுடன் நாமலுக்கு இரகசியத் தொடர்பு

## அமைச்சர் ஆனந்த விஜேபால பகிரங்கம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பு இருப்பதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று (18) பாராளுமன்றில் பகிரங்கப்படுத்தினார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

இந்தோனேசியாவில் இருந்து கைது செய்யப்பட்டு அழைத்து வரப்பட்ட திட்டமிட்ட குற்றக் கும்பல்களைச் சேர்ந்த சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்தத் தொடர்பு தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பாதாள உலகக் குழுக்களுடன் நாமலுக்கு உள்ள தொடர்பு குறித்து தற்பொழுது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. விசாரணைகள் முடிந்த பின்னர் பல முக்கிய விவரங்கள் வெளியிடப்படும்.

இந்த நாட்டில் இனவாத, மதவாத செயற்பாடுகளுக்கு இனி இடமளிக்கப்படாது எனவும் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# பேருவளைக் கடலில் மர்மப் பொதிகள் மீட்பு


## தீவிர விசாரணைகள் ஆரம்பம்

பேருவளை கடற்கரையில் இருந்து சுமார் இரண்டரை கடல் மைல் தொலைவில் கடலில் மிதந்து வந்த இரண்டு பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. இந்தப் பொதிகள் ஒவ்வொன்றும் சுமார் 100 கிலோகிராம் எடையுடையவை எனத் தெரிவிக்கப்படுகிறது. மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவு மற்றும் இலங்கை கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின் போதே இந்தப் பொதிகள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட இந்தப் பொதிகளில் போதைப் பொருட்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.இந்தப் பொதிகள் கடல் மார்க்கமாக போதைப்பொருள் கடத்தல் முயற்சியின் ஓர் அங்கமா? என்றகோணத்தில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (ம-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025

“ஒரு மரத்தை நடவு செய்து பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்”



சத்குரு (இந்திய ஆன்மீகக் குரு)

# மூத்த இசை நாடக கலைஞர் பரராஜசிங்கம் காலமானார்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் பாரம்பரிய இசை நாடகக் கலைக்குப் பெரும் பங்களிப்பை வழங்கிய வடமராட்சி துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைக்குரிசில் க.ப.பரராஜசிங்கம் அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

"நாடகச் சக்கரவர்த்தி" "இசைநாடக நவரசக் கலைமணி", "கலைக் குரிசில்", "கலாபூஷணம்" எனப் பல விருதுகளைத் தனதாக்கிய இவருடைய கலைப் பயணத்தில், 1969 இல் மேடையேற்றப்பட்ட "சிலம்புச் செல்வி" இசை நாடகத்தில் கோவலன் பாத்திரம் திருப்புமுனையாக அமைந்திருந்தது. அதன் பின்னர், "வள்ளி திருமணம்", "பவளக் கொடி", "அரிச்சந்திரா", "இலங்கேஸ்வரன்" உள்ளிட்ட பல நாடகங்களில் முக்கிய பாத்திரங்களை ஏற்று ரசிகர்களின் மனதில் நீங்காத இடம் பிடித்தார்.

நடிகராக மட்டுமல்லாது, "பாஞ்சாலி சபதம்", "அரிச்சந்திர மயான காண்டம்" போன்ற நாடகங்களை நெறியாள்கை செய்தும் கலைச் சேவை ஆற்றியுள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது புலோலி தெற்கில் உள்ள கலைக் கோயில் இல்லத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

03

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

மொத்தம் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பிரதமராகப் பணியாற்றிய சேக் ஹசீனா, வங்கதேச வரலாற்றில் அதிக காலம் பதவி வகித்த பிரதமர் ஆவார். 2024 ஆம் ஆண்டில் தொடர்ச்சியான வன்முறை எதிர்ப்புகளைத் தொடர்ந்து பிரதமர் பதவியைத் துறந்து 2024 ஒகஸ்ட் 5 இல் நாட்டை விட்டு வெளியேறினார்.

### நேபாளத்தின் முதல் இடைக்கால பெண் பிரதமர்



சுஷிலா கார்க்கி

நேபாளத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாக இருந்த சுஷிலா கார்க்கி, இப்போது (2025.09.12) நேபாளத்தின் முதல் இடைக்கால பெண் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ளார். சுஷிலா கார்க்கிக்கு ஜனாதிபதி ராம் சந்திர பௌடெல் பதவி மற்றும் ரகசியக் காப்புப் பிரமாணம் செய்து வைத்தார்.

"ஜென் Z" போராட்டக்காரர்கள், தலைவர்கள், ஜனாதிபதி பௌடெல் மற்றும் பிற சட்ட நிபுணர்களுடன் பல நாட்கள் நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, சுஷிலா கார்க்கி இடைக்கால பிரதமராக நியமிக்கப்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் சமூக வலைத்தளத் தடைக்கு எதிராக இளைஞர்கள் நடத்திய போராட்டங்களுக்கு மத்தியில், பதவி விலகிய கே.பி. ஷர்மா ஒலிக்கு பதிலாக சுஷிலா கார்க்கி பொறுப்பேற்கிறார்.

### பண்டைய இலங்கைப் பெண்களின் பலம் குவேனியின் அரசபலம்

விஜயன் கப்பலை விட்டு இறங்கி, இலங்கைத் தீவில் காலடி வைக்கிறான். இது கி.மு. 543-இல் நடந்தது. விஜயன் இறங்கிய இடம் அழகிய இயற்கைக் காட்சிகள் கொண்டது. அங்கு ஒரு மரத்தடியில் குவேனி என்ற பெண் அமர்ந்திருக்கிறாள். இவள் இராட்சச குலத்தைச் சேர்ந்தவள்.

குவேனி என்ற சொல், கவினி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு ஆகும். கவினி என்றால் "பேரழகு படைத்தவள்" என்று பொருள். இலங்கையை ஆண்ட இராவணன் இராட்சதன் என்று கூறப்பட்டதுபோல, குவேனியையும் இராட்சத குலம் என்று வர்ணிக்கிறது, "மகாவம்சம்" குவேனியை விஜயன் சந்தித்து அடைக்கலம் கோருகிறான். அவள் அடைக்கலம் அளிக்கிறாள். அப்போது குவேனியிடம் அரசபலம் இருந்தது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு தான் இலங்கை அரசியலில் பெண்களின் வகிப்பாகம் தொடங்குகிறது.

### விகாரைமகாதேவியின் அரசபலம்

கல்யாணி இராசதானியின் மன்னன் களனிதீசனின் மகளே மகாதேவியாவாள். பின்னாளில் இவள் விகாரைமகாதேவி என அழைக்கப்பட்டாள். எல்லாளனின் தோல்விக்கு விகாரைமகாதேவியே மிக முக்கிய காரணமாகிறாள்.

### அனுலாதேவியின் அரசபலம்

அனுலாதேவி, கி.மு. 47 தொடக்கம் கி.மு. 42 வரை இலங்கையின் அநுராதபுரத்தை ஆண்ட அரசி. இவளே இலங்கையை ஆண்ட முதல் அரசியாவாள். ஆசியாவின் முதல் பெண் அரச தலைவர் ஆவார்.

### சீவலியின் அரசபலம்

சீவலி கி.பி. முதலாம் நூற்றாண்டில், அநுராதபுரத்தை கி.பி. 35 ஆம் ஆண்டில் ஆட்சி செய்து வந்தாள். இவள் தனது சகோதரனான சூலபாயனின் பின்பு ஆட்சிக்கு வந்தாள்.

### லீலாவதியின் அரசபலம்

அரசி லீலாவதி (ஆட்சிக் காலம்: 1197-1200, 1209-10, 1211-12) என்பவர் இலங்கை வரலாற்றில் தனது சொந்த உரிமையில் இறையாண்மையாக ஆட்சி செய்த நான்காவது பெண் ஆவார். இவர் பொலன்னறுவை இராச்சியத்தின் அரசரான முதலாம் பராக்கிரமபாகுவின் மனைவியாகப் பிரபலமடைந்தார். அதாவது இராணியாக 1153 முதல் 1186 வரை இருந்தார். அரச வம்சத்தைச் சேர்ந்த இவர், பராக்கிரமபாகுவின் மரணத்தைத் தொடர்ந்து, பல்வேறு தளபதிகளின் ஆதரவுடன், மூன்று முறை பொலன்னறுவை இராச்சியத்தை ஆட்சி செய்தார். இவரது வாழ்க்கைக் குறிப்புகள் சூளவம்சம் என்ற நூலில் தரப்பட்டுள்ளன.

### கல்யாணவதியின் அரசபலம்

கல்யாணவதி மன்னன் நிஸ்ஸங்க மல்லாவின் மனைவி ஆவார். இவர் 1202 முதல் 1208 வரை பொலன்னறுவையின் ராணியாக இருந்தார். இலங்கையில் ஆட்சி செய்த சில ராணிகளில் இவரும் ஒருவர். இவர் 1196 இல் விதவையானார். இவர் சஹஸ்ஸ மல்லாவுக்குப் பிறகு பொலன்னறுவையின் ராணியாக பதவியேற்றார். 1202 இல், படைத் தலைவரான அயஸ்மந்தா, மன்னன் சஹஸ்ஸ மல்லாவை பதவி நீக்கம் செய்து, அவருக்குப் பதிலாக அரசி கல்யாணவதியை அரியணையில் அமர்த்தினார். அவரது ஆட்சி அமைதியான ஆட்சி என்று வர்ணிக்கப்படுகிறது.

### சங்கமித்தை வருகை

சங்கமித்தை பெண்களுக்கான பிக்குணிகள் சங்கத்தை இலங்கையில் தோற்றுவித்தார். இவரின் வருகையோடு புத்தசமயம் இலங்கையில் எழுச்சிபெற்றது.

இவ்வாறு நோக்குமிடத்து, இலங்கை அரசியலில் பெண்களின் தலைமைத்துவம் வியாபித்துக் காணப்பட்டதைக் கண்டறியலாம். வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில், பெண்களின் அரசியல் தலைமைத்துவம், ஆட்சிபீடம் ஏறியுள்ள போதிலும், காலனித்துவ ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னும் பெண்களின் அரசியல் சுரண்டப்பட்டிருப்பதை காண்கின்றோம்.

### குடும்பம் என்ற சமூக கட்டமைப்பிற்குள் பெண்கள்

இலங்கையில், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டே, குடும்பம் என்ற சமூக கட்டமைப்பு அமைந்திருந்தது. அதிலேயே, அவர்களின் வருமான நிலைமையும் அடங்கியிருந்தது. அதற்குள், பெண்களின் பொறுப்புகள், கடமைகள் மற்றும் உரிமைகள் தொடர்பான சிந்தனைகள், விவசாயப் பொருளாதார நலன்கள் அடங்கியிருந்தன.

பிற்காலத்தில், இந்தப் பொருளாதார முறைமை சீர்குலைந்து, தொழிற்றுறைகள் மீது நம்பிக்கை கொள்ளும் சந்தைப் பொருளாதாரம் உருவாகத் தொடங்கியது. இதனால், வீட்டு வேலைகளுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டிருந்த பெண்கள், வீட்டை விட்டு வெளியேறி, பொருளாதாரத்தை ஈட்டும் நடவடிக்கைகளில் பங்குபற்றத் தொடங்கினர்.

இருப்பினும், பெண்ணுக்கான வேலைகள் அதிகரிக்கப்பட்டனவே தவிர, அவருக்கு வழங்கப்பட்டிருந்த கடமைகள், பொறுப்புகள் மற்றும் குடும்ப நடவடிக்கைகளுக்கே, அவரால் அதிக காலம் ஒதுக்கப்பட வேண்டிய நிலைமை காணப்பட்டது.

குடும்பத்துக்காக அதிக நேரத்தை ஒதுக்கவேண்டி இருந்ததால், அவரால், சுதந்திரமான நபராக சமூகத்துக்குள் நடமாடக்கூடிய, வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. இதனால் அவர்கள் அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர்.

### பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை பெண்களே தீர்க்க வேண்டும்

நவீன ஆட்சி முறைகளில் ஜனநாயகம் மிகவும் பிரபல்யமானது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் விபரீத...

செட்டிச்சோலையைச் சேர்ந்த ஆனந்த குமார் கஜிந்தன் (வயது-28) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## யாழில் 160.8...

தாக யாழ்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.சூரிய ராஜா தெரிவித்தார்.

அதிகூடிய மழைவீழ்ச்சி காரணமாக 10 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் பாதிப்புக்குள்ளாகி உள்ள நிலையில் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை மழை நீடிப்பதற்கான வாய்ப்புள்ளது.

பகல் வேளைகளில் மழை பெய்யும் போது இடி மின்னல் தாக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ள நிலையில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு தெரிவித்தார்.(ம-7)

## யாழில் ரயில்...

தந்தையே உயிரிழந்தவராவார்.

குடும்பப் பிணக்குக் காரணமாக கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்ததாகத் தெரிய வருகின்றது.

மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,33,60)

## 76 வருட...

கின்றனர் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளால் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலையில் சட்டமுரணாக வைக்கப்பட்டிருந்த புத்தர்சிலை அகற்றப்பட்ட பின் பாராளுமன்றத்தில் மீண்டும் நிறுவுவோம் என்று குறிப்பிட்டு மீளச் சிலையை மக்களின் எதிர்ப்புக்களை மீறி நிறுவியிருக்கும் செயல் எந்த அரசு அதிகாரத்திற்கு வந்தாலும் சிங்களப் பேரினவாதப்போக்கு மாறாது என்பதையே உணர்த்துகின்றது. புத்தர் சிலையின் பாதுகாப்புக் கருதி அகற்றப்பட்டிருக்கின்றது என்று சொல்லுவது தொடர்ச்சியாக சிங்கள மக்களிடத்தில் தமிழர்களை தீயவர்களாகச் சித்தரிப்பதைத் தான் எடுத்துக்காட்டுகிறது.

புத்தர் சிலையை வைத்தது யார்? அமைதியாக தங்கள் அன்றாட வாழ்க்கையை வாழும் தமிழ் மக்களைக் குழப்பியது யார்? புத்தர் சிலையை அகற்ற வந்த பொலிஸாரின் கன்னத்தில் அறைந்தது யார்? இவர்களுக்கு எதிராக எல்லாம் இந்த நாட்டில் சட்டம் செயற்படாதா? நாட்டின் ஆட்சியாளர்கள் மக்களுக்கான சேவையை ஆற்றுவதைக்காட்டிலும் புத்த பிக்குகளின் பேச்சை வேதவாக்காகக் கேட்டு நடப்பதையே இனப்பிரச்சினை தொடங்கிய காலகட்டத்திலிருந்து அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது என்றனர். (ம-7,33,104)

## வடக்கில்...

செவ்வாய்க்கிழமை (18) உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் செயற்படுகிறது. தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளால் தேசிய பாதுகாப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது.

30 ஆண்டுகால யுத்தத்தால் அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டார்கள். யுத்தம் முடிவடைந்து விட்டது என்று குறிப்பிட முடியாது. எதிர்காலத்தில் யுத்தம் ஒன்று தோற்றம் பெறலாம். ஆகவே அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை இராணுவத்தினர் வசம் வைத்துக் கொள்ள வேண்டும். வடக்கு மாகாணத்தில் மீண்டும் யுத்தம் ஒன்று தோற்றம் பெறாத வகையில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை விடுவிக்கக்கூடாது என்றார். (ம-7)

## தமிழரசுக் கட்சி...

கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தம்முடன் பேச்சுக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர்சி.வி.கே.சிவஞானம் மற்றும் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர்ஒப்பமிட்டு அனுப்பி வைத்த கோரிக்கைக் கடிதத்தின் அடிப்படையில் இந்தச் சந்திப்புக்கு ஜனாதிபதி செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர், பொதுச்செயலாளரோடு கட்சியின் எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களும் நாளை நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் பங்குபற்றவுள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, மாகாண சபைத் தேர்தல், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் திருகோணமலை கடற்கரையில் நிறுவப்பட்ட புத்தர் சிலை ஆகியவை உள்ளிட்ட பல விடயங்கள்குறித்து தமிழரசுக் கட்சியினர் இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவர்கள் என்று தெரிகிறது. (ம-7)

## திரு...

நேற்று பாராளுமன்றத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி, திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விளக்கமளித்தபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் நிறைவடைந்துவிட்டது. பிரச்சினை நிறைவடைந்த பின்னரும் ஏன் எழுந்து ஆடுகிறீர்கள் என ஜனாதிபதி இதன்போது எதிரணியினரிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

எங்களுடைய நாட்டில்பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இனவாதம் தூண்டப்பட்டு வந்தது.

கடந்த அரசாங்கங்களுக்கு எதிராக ஊழல், பொருளாதார வீழ்ச்சி போன்ற பல குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

எனினும், எங்களுடைய அரசாங்கம் மீது இவ்வாறு எந்தவொரு குற்றச்சாட்டையும் முன் வைக்க முடியாதுள்ளது. எனவே இவ்வாறு இனவாத விடயங்களால் எங்களுடைய அரசாங்கத்தைத் தோற்கடிப்பதே எதிரணியின் நோக்கம். அனுமனைப் போல் இனவாதத்தை வைத்து தீ மூட்ட முயற்சிக்கின்றனர்.

திருகோணமலை விவகாரம் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

இதில் மறைமுக விடயம் ஒன்று உள்ளது.

புதிய கட்டுமானங்களை நிறுவ வேண்டாம் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தச் சிக்கல் தற்போது நிறைவடைந்துவிட்டது. தற்போது ஏன் ஆடுகிறீர்கள்?

எங்களுடைய அரசாங்கம் ஒரு போதும் இனவாதத்துக்கு இடமளிக்காது. பழைய இனவாத நாடகங்கள் தற்போது அரங்கேற வழிவிடமாட்டோம். நாட்டின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் இனவாதம் இருக்காது" என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 6017
E 4 6 4 6 8 2

அத சம்பத
E 4 6 8 2
சீட்டிழுப்பு இலக்கம் 0592
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 0133
துலாம் 11 51 62
3286

தன நிதானய
திகதி - 2025.11.18
சீட்டிழுப்பு இலக்கம் - 2047
W 30 34 55 71 W
Double Chance

மெகா பவர்
திகதி 18/11/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2365
Y 06 20 26 56 79

ஜய
திகதி 2025.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 0285
M 6 5 8 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4259
சீட்டிழுப்பு திகதி 18.11.2025
A 19 30 31 40
A
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 1326
கும்பம் 26 32 56 59 கும்பம்
தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்ரீம் சம்பத்
18.11.2025 வெற்றி வாரம் 0725
X 7 5 3 0 4 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,920,322.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2991
சீட்டிழுப்பு திகதி 2025.11.18 தினம் செவ்வாய்க்கிழமை
04 21 35 55 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,012,600.80
DLB

சனிதா
திகதி 18.11.2025 வெற்றி வாரம் 5152
12 21 71 76 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,216,346.80
DLB

சசிரி
வெற்றி வாரம் 821
சீட்டிழுப்பு திகதி 18.11.2025
செவ்வாய்க்கிழமை
09 14 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4703
சீட்டிழுப்பு திகதி 18.11.2025 தினம் செவ்வாய்க்கிழமை
05 14 48 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,899,598.40
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 14 01 22 52 64
2167
18.11.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.608,090,908.80
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2817
சீட்டிழுப்பு திகதி: 2025.11.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,897,223.20
08 33 60 66 R
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் ...

நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இந்த விவகாரம் குறித்த செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுவதற்காகவே பொலிஸார் உள்ளனர்.

எனவே, எந்தவொரு சம்பவத்தையும் அடிப்படையாகக் கொண்டு, நாட்டில் சட்டச் சீர்குலைவு ஏற்படுவதற்கு பொலிஸார் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

இந்த சம்பவத்தில் குறித்த இடத்தில் தற்காலிகமாக சிற்றுண்டிச்சாலையொன்றை நிர்மாணிக்க செல்ல சிலகாலம், சில கட்டுப்பாடு மற்றும் அளவுகோல்களின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

குறித்த கட்டுப்பாடுகளை மீறியமை தொடர்பில் அந்த கட்டடத்தை இடிப்பதற்கான உத்தரவொன்றும் உள்ள நிலையிலேயே அங்கு புத்தர் சிலையொன்றும் கொண்டுவரப்பட்டது.

இலங்கையின் வரலாற்றை நோக்குமிடத்து, புத்தர் சிலையொன்று சேதப்படுத்தப்படுமானால், அதன் பின்னர் உருவெடுக்கும் பிரச்சினைகள் எவ்வளவு பாரதூரமானதாக இருக்கும் என்பதை அனைவரும் அறிவோம்.

சம்பவம் தொடர்பில், தொடர்புடைய அனைத்து தரப்புகளுடனும் அரசாங்கம் கலந்துரையாடி வருகிறது.

இவ்வாறான பின்னணியில் குறித்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, எவரேனும், அரசியல் இலாபம் பெறுவதற்கு, கூட்டங்களுக்கு மக்களைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கப்படுமாயின் அரசாங்கம் அதனை முறியடிக்கும் என்றார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4361)

076 825 7716 (ஆகாஸ்)



### வீடு வாடகைக்கு

ஸ்ரேசன் வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து 150m தொலைவில் நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.

WhatsApp:
+ 94 77 11 55 909 (5952)



### வீடு விற்பனைக்கு

ஸ்ரேசன் வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து 150m தொலைவில், நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர்கள் தேவையில்லை)

WhatsApp:
+ 94 77 220 1592 (5952)



### காணி விற்பனைக்கு

நீர்வேலிச் சந்தியில் வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நல்ல சூழலில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (5913)

071 016 9768, 076 481 1296
076 917 0364, 077 437 0882



### தேசிய லொத்தர் சபை ரிக்கட் விற்பனையாளர்கள் தேவை

திருநெல்வேலி/ கொக்குவில்/ கோண்டாவில்/ சுன்னாகம் ஆகிய இடங்களிற்கு ரிக்கட் விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை.
அலுவலக வேலைக்கு பெண் பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு :
077 122 8841 (5948)



### வீடு விற்பனைக்கு

ஸ்ரேசன் வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து 150m தொலைவில், நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர்கள் தேவையில்லை)

WhatsApp:
+ 94 77 220 1592 (5952)



### மணல் விற்பனைக்கு

யாழ். மாவட்டத்தில் கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் 50,000இல் இருந்து விற்பனைக்குண்டு. (5956)

076 324 9977



### மாப்பிள்ளை தேவை

01. இருபாலை, இந்து, 1997, ரோகிணி, IT degree ayurvedic doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55043)
02. சுன்னாகம், இந்து, 1988, பரணி, MSc(UK), UK citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54543)
03. கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Bio Chemistry, Germany citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54321)
04. சாவகச்சேரி, இந்து, 1994, அஸ்தம், BDS (University of Jaffna), Dental doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54201)
05. இருபாலை, இந்து, 1998, உத்தராடம், HNDA in Accounting மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49646)
06. அச்சுவேலி, இந்து, 1995, பூசம், B.Com Accountant, Australia citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (43129)
07. அச்சுவேலி, இந்து, 1992, ரோகிணி, BSc(Hons) in biological science மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (41136)
08. கந்தரோடை, இந்து, 2000, திருவாதிரை, Software Engineering மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35870)
09. இளவாலை, இந்து, 1987, திருவாதிரை, Dentist doctor, canada citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32087)
10. சுன்னாகம், இந்து, 1995, திருவாதிரை, BSc(Hons) Micro biology, translational data scientist மணப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30662)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (1719)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728



### 22 உடன் விற்பனைக்கு 22

01. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்பு காணியும்
02. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 30 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட 2 கடைகளும்
03. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் SVM களஞ்சியசாலைக்கு முன்பாக 30 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட தனிக் கடையும்
04. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் 16 பரப்பு காணியும்
05. யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகை காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்பு காணியும்
06. யாழ். மின்சார நிலைய வீதியில் 6 பரப்பு காணியும்
07. யாழ். மின்சார நிலைய வீதி, பழைய தபாற் கந்தோர் வீதியில் 6 பரப்பு காணியும்
08. யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்
09. யாழ். பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்
10. யாழ். பிறவுண் வீதியில் 100 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட ஒரு பரப்பு காணியும்
11. யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்பு காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : (C-4357)
0777 232 535



### கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2430/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4360)

UK 11Kg - 1390/- France 11Kg - 2160/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



### உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4360)

V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
076 8226236



### வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village hotel & Indian Restaurant இற்கு சமையல் அனுபவம் உள்ள ஆண்/ பெண் தேவை.

தொடர்புகளுக்கு : (5949)
076 830 3931



### பெண் ஊழியர்கள் தேவை

யாழ் மண்ணில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட UTC Events arrangements நிறுவன வேலைக்கு பெண் ஊழியர்கள் தேவை...
ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்..

- Assistant
- Promotions and Marketing team

Please send your CV along with details to our email (1718)

Email Id: ilamaifm24@gmail.com 076 094 5306



### யாழ்ப்பாணத்தில் Voyzant

10 பேர் கொண்ட குழுவில் ஒரு நபரிற்கு - 185,000/=

தென்னிந்திய ஆலய தரிசனம் 09 இரவுகள்/10 நாட்கள்

தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற 35 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் (மேலும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கான சுற்றுலாப் பயணங்களும் மேற்கொள்ளப்படும்.)



மேலதிக விபரங்களுக்கு:
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866 (3725)

Voyzant(PVT)Ltd


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org